முரசொலி

— வார இதழ் —

ஆசிரியர்: மு.கருணாநிதி

முரசு 4 | 11-10-57 வெள்ளி | ஒலி 2

தமிழன்னைக்கு ஆபத்து!

அகில இந்திய வானொலியின் டைரக்டர்—ஜெனரலான ஜே. பி. மத்தூர் என்பாரை தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தோழர் வி. பி. இராமன் அவர்களுடன் கடந்த 5—10—'57 அன்று, சென்னை வானொலி நிலையம் சென்று சந்தித்தார். அந்த அதிகாரியிடம் தி. மு. கழகச் சார்பில் அறிக்கை ஒன்று தரப்பட்டது.

அகில இந்திய ரேடியோ நிலையத்தார் புதிதாய்த் துவங்கியிருக்கும் 'விவித் பாரதி' நிகழ்ச்சியானது, இந்தித் திணிப்பிற்கு மற்றொரு எடுத்துக்காட்டு என்றே தென்னாட்டவரால் கருதப்படுகிறது என்பதை அந்த அதிகாரிக்கு பொதுச் செயலாளர் எடுத்துரைத்தார்.

வானொலியா? காது வலியா? வதை போக்க இன்றே முயல்வீர்!

அகில இந்திய வானொலிக்குத் தரப்பட்ட அறிக்கையின் முழு விவரம் பின்வருமாறு:

தென்னாட்டின் நான்கு வட்டார மொழிகளில் ஏதேனும் ஒன்றிலோ அல்லது தமிழ் மொழியிலோ நிகழ்ச்சிகளை ஒலி பரப்புவதற்கு சக்தி வாய்ந்த ஒலி பரப்புக் கருவிகள் இல்லாமையால், தென்னாட்டு மக்கள்—குறிப்பாகத் தமிழக மக்களும் தூரக் கிழக்கு நாடுகளிலும் தென் ஆப்பிரிக்கா, இலங்கை முதலிய நாடுகளிலும் வாழும் இலட்சக் கணக்கான தமிழர்களும் பெரும் கஷ்டத்திற்கு ஆளாகியுள்ளனர். இப்போது சென்னையிலிருக்கும் நடுத்தர அலை ஒலிபரப்புக் கருவி 20 கிலோவாட் சக்தி கொண்டது தான்; இது வெளிநாடுகளிலும் தென்னாட்டின் தொலை தூரத்திலும் வாழும் தமிழ் பேசும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இல்லை. எனவே, சென்னையில் ஒரு 100 கிலோவாட் ஒலிபரப்புக் கருவி அமைக்கப்பட விருக்கிறது என்ற செய்தி கேட்டபோது பொதுவாக அனைவரும் மகிழ்ந்தனர்; ஆனால் இந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை.

சென்னையில் உள்ள இந்த சக்தி வாய்ந்த ஒலிபரப்புக் கருவி, பம்பாயில் இதேபோல் உள்ள ஒரு 'யூனிட்'டுடன் சேர்ந்து 'விவித் பாரதி' என்ற பெயருடைய நிகழ்ச்சிகளைக் கூட்டாக ஒலி பரப்பும் என்று புது டில்லியில் முடிவு செய்யப்பட்டவுடனேயே தென்னாட்டு மக்கள் கோபப்பட்டனர்; அவர்கள் உள்ளத்தை அச்சமும் ஆத்திரமும் ஆட்கொண்டது. இதன் காரணம் சுலபத்தில் அறியக் கூடியதே.

நேரடியாகவும் மறைமுகமாகவும் கட்டாய இந்தி திணிக்கப்படுவதற்குப் பொதுவாகத் தென்னாட்டில் பரவலான எதிர்ப்பு இருக்கிறது என்பது, பிரச்சினையை ஏறெடுத்துப் பார்க்க மறுப்பவர்களுங்கூட இப்போது தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும்.

'விவித் பாரதி' தலைப்பின்கீழ் ஒலி பரப்ப அறிவிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சி நிரல், எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்திருக்கிறது; விரும்பாத மக்கள் மீது தேவைப்படாத ஒன்றைத் திணிப்பதற்கு டெல்லி சர்க்கார் எல்லா வகையான முயற்சிகளையும் மேற்கொள்ளுவர் என்ற தென்னாட்டவரின் சந்தேகங்களை, இந்த அறிவிப்பு உறுதிப்படுத்துவதாகவே கருதப்படுகிறது.

1957, அக்டோபர் 3-ந் தேதியன்று 'விவித் பாரதி' நிகழ்ச்சி மொத்தம் 7 மணி 15 நிமிடங்களுக்கு இருந்தது. இதில் 9-15 முதல் 9-30 வரை (பாரத் வாணி) 15 நிமிடங்கள் மட்டுமே—மேலும் 8-15 முதல் 8-35 வரையிருந்த (மஞ்ஜூஷா) 20 நிமிட நேரத்தில் ஒரு பகுதியும் மட்டுமே-பிரதேச மொழிகளில் ஒலி பரப்பிற்கென ஒதுக்கப்பட்டது. இதர நாள் நிகழ்ச்சிகளிலும் அதிக மாற்றம் ஒன்றும் இல்லை. மொத்தம் 5-மணி நேர நிகழ்ச்சிகளில் சுமார் 15 நிமிடங்கள் மட்டுமே ஏதோ பிச்சையிடுவதுபோல எண்ணி, பிரதேச மொழிகளில் ஒலிபரப்பிற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன. எஞ்சியுள்ள நேரம் முழுவதிலும் இந்தி நிகழ்ச்சிகளுக்காக ஒதுக்கப்பட்டு விடுகிறது. தென்னாட்டு மக்களுக்கு இந்த நிகழ்ச்சிகளின் தலையும் தெரிவதில்லை; காலும் தெரிவதில்லை. இது தங்களுக்குப் புரியாத மொழியில் நிகழ்ச்சிகளை ஒலி பரப்பி, மக்கள்மீது வலுக் கட்டாயமாக அவற்றைத் திணிப்பதற்கு ஒப்பாகும்.

பிரதேச மொழிகளில் ஒலிபரப்பிற்கென ஒதுக்கப்பட்டுள்ள **15** நிமிட நேரத்தைக்கூட **14** மொழிகள் பங்கு போட்டுக் கொள்ள வேண்டியுள்ளது; அதாவது ஒவ்வொரு **15** நாளுக்கும் **15** நிமிட நேரம், அல்லது ஒருநாளில் **5** மணி நேர ஒலி பரப்பில் சராசரியாக ஒரு நிமிடம் மட்டுமே தமிழ் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பிற்குக் கிடைக்கும்! இந்த அநீதி குறித்து விளக்கத் தேவை இல்லை; இது அனைவருக்கும் தெரிந்தே இருக்க வேண்டும்.

இந்தித் திணிக்கப்படுவதை உறுதியாக எதிர்த்து நிற்கும் திராவிட முன்னேற்றக் கழகம் தென்னாட்டின் பிரதான அரசியல் கட்சிகளுள் ஒன்றாகும். அறிவிக்கப்பட்டுள்ள வகையிலே 'விவித் பாரதி' நிகழ்ச்சிகள் தொடர்ந்து ஒலி பரப்பப்படுமானால், அது தென்னாட்டு மக்களின் உணர்ச்சிகளைக் குறிப்பிடத் தகுந்த அளவு கிளப்பி விடும் என்பதை அதிகாரிகளின் கவனத்திற்குக்கொண்டு வர வேண்டியது தனது கடமை எனக் கழகம் கருதுகிறது.

பிரதேச மொழிகளை நிந்திக்கிற வகையில்—புறக்கணிக்கிற வகையில திட்டமிட்டு இந்தி நிகழ்ச்சிகள் ஒலி பரப்பப்படுவது, சிலர் தவருக எண்ணிக் கொண்டிருக்கிறபடி இந்தியைப் பரப்புவதற்கு உதவாது; இந்தி பேசாத மக்களின் நியாயமான உணர்ச்சிகளைக் கொஞ்சமும் முன் யோசனையின்றி மிதித்துத் துவைப்பதானது நிலைமையை மேலும் பாதகமாக்கும்; அந்த மொழியை (இந்தி) பரப்புவதற்கு உதவாது என்பதுடன் இந்தி பேசுகிற மக்களுக்கும்—பேசாத மக்களுக்கும் இடையில், நீக்க முடியாத நிரந்தரமான பிளவைத்தான் உண்டு பண்ணும்.

எனவே, திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் என்ற முறையில் நான் கீழ்க்காணும் உருவான யோசனைகளைத் தகவல், மற்றும் ஒலி பரப்பு அமைச்சரவை முன் வைக்க விரும்புகிறேன்:—

(1) சென்னையில் உள்ள 100 கிலோவாட் ஒலிபரப்புக் கருவி தென்னாட்டின்—தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் என்ற நான்கு மொழிகளிலும் நிகழ்ச்சிகளை ஒலி பரப்பப் பயன்படுத்தப்பட வேண்டும்; இதனால் ஒவ்வொரு மொழிக்கும் தினந்தோறும் ஒன்றரை மணி நேரம் நிகழ்ச்சிகள் ஒலிபரப்ப சந்தர்ப்பம் கிடைக்கும். மேலும் இந்த நிகழ்ச்சிகளை சிற்றலைகளிலும் ஒலி பரப்ப வேண்டும். மேலும், இந்த 4 மொழிகளிலும் ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகளின் சாரங்களை, சென்னை, விஜயவாடா, கோழிக்கோடு, பெங்களூர் ஆகியவற்றில் உள்ள நடுத்தர அலை ஒலிபரப்புகள் மூலமும், பிரதேசத்தில் உள்ளவர்களும் பயன்பெறும் வண்ணம் ஒலி பரப்ப வேண்டும்.

(2) தென்னாட்டு மொழிகளில் சென்னையிலிருந்து ஒலி பரப்பப்படும் நிகழ்ச்சிகள் தூரக் கிழக்கு நாடுகளிலும், இலங்கையிலும் வாழும் தமிழர்களுக்குப் பயன்படும் வகையில் தக்க நேரத்தில் ஒலிபரப்பப்பட வேண்டும்.

(3) எது எப்படி இருந்தாலும், இப்போதைய ஏற்பாட்டின்படி தென்னாட்டின் நான்கு பிரதேச மொழிகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள நேரம் மிகக் குறைவானது என்பதால், 'விவித் பாரதி' நிகழ்ச்சி ஒலிபரப்பப்படுவதை உடனே நிறுத்த வேண்டும்; இன்றேல், விபரீதமான விளைவுகள் தோன்றக் கூடும்.

[அறிக்கையைக் கண்ணுற்ற அதிகாரி, இது சம்மந்தமாக முடிந்ததைச் செய்வதாக வாக்களித்தார்.]

அரசினர் திட்டங்களும் ஆமையின் வேகமும்!



இந்திய அரசாங்கம் வேகமாகப் போடும் திட்டங்களெல்லாம் எப்படி 'வேக'மாக நிறைவேறுகிறது என்பதைச் சித்தரித்திருக்கிறது, 'சங்கர்ஸ் வீகலி'!



வெள்ளி 11—10—57 சென்னை

ஆதாரமற்ற ஆதாரக் கல்வித் திட்டம்!

மேலை நாடுகளிலே அறிவியல் தத்துவங்களை நிரூபிப்பதற்காகவும்; புதியன கண்டு பிடிப்பதற்காக நடத்தப்படும் சோதனைகளுக்காகவும் விஞ்ஞானிகள் மனிதர்களைத் தேர்ந்தெடுப்பதில்லை.

குழிமுயல்; எலி—போன்ற பிராணிகளுக்கு அந்த மருந்தைக் கொடுத்துச் சோதித்து; அந்த மருந்து அந்தப் பிராணிகளுக்கு ஏற்படுத்திய கெடுதல்களைக் களைந்து; கடைசியாகத்தான் அவற்றை மனித உடலிலே செலுத்தி ஆராய்வது வழக்கம்!

—அப்படி மனித உடலிலே செலுத்தி ஆராய்ச்சி நடத்த வேண்டும் என்கிற அவசியம் ஏற்பட்டால்கூட அவர்கள் நுண்ணறிவு ஏதுமறியாத பாமரர்களைத் தேர்ந்தெடுக்கமாட்டார்கள்; தங்களையே அந்தச் சோதனைகளுக்கு உட்படுத்திக் கொள்வார்கள். உதாரணமாக, எட்வர்ட் ஜென்னர் 'மலேரியா காய்ச்சலுக்குக் காரணம் கொசுவென்று கண்டுபிடித்து, அதற்கான தடுப்பு மருந்தையும் கண்டு பிடிக்க ஆராய்ச்சியில் ஈடுபட்டபோது; மலேரியா கொசுக்களைப் பிடித்து வந்து; தனது திரேகத்தின்மீது நடமாடவிட்டு; கடிக்கச் செய்து; ஆராய்ச்சி நடத்தினர்!

—மேலை நாடுகளில் அறிவியல் தத்துவங்களுக்கே இந்த நிலை!

ஆனால் இங்குள்ள 'அரசியல் எட்வர்ட் ஜென்னர்'களோ தங்களுடைய அபாயம் நிரம்பிய சோதனைகளைப் பரீட்சித்துப் பார்க்க ஒரு பாபமும் அறியாத அப்பாவிப் பாமர மக்களைத்தான் பயன்படுத்தி வருகிறார்கள்!

—இதற்குத் தக்கதோரு சான்று காங்கிரஸ் கட்சி கட்டியழுது கொண்டிருக்கிற ஆதாரக் கல்வித் திட்டமாகும்!

ஆதாரக் கல்வித் திட்டம்—இருபதாம் நூற்றாண்டில் இருப்பதற்கே லாயக்கற்ற திட்டம் என்று அறிஞர்கள் பலர் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள்.

காந்தியாருக்கு எந்த அளவுக்குப் புகழ் இருக்கிறதோ, அந்த அளவுக்கு இழிவு உண்டு இந்தத் திட்டத்திற்கு!

—இருந்தாலும் இவற்றை யெல்லாம் ஒரு சிறிதும் பொருட்படுத்தாமல் பொதுமக்கள் வரிப் பணத்தையும்; அதைவிட விலைமதிக்க முடியாத இந்த நாட்டின் வருங்கால சந்ததியார்களையும் பாழ்படுத்தி வருகிறது ஆட்சியாளரது இந்த முயற்சி!

ஒரு திட்டம் நன்மை தருவது; உத்தமமானது; உயர்ந்தது—என்று நிச்சயமாகத் தெரிந்தால் அந்தத்திட்டத்தை எப்பாடு பட்டாவது நாடெங்கும் பரப்புவதிலேதான் ஒரு நல்ல அரசு அக்கறை காட்ட வேண்டும்!

அப்படி ஏதாவது முயன்றிருக்கிறதா, இந்த அரசு?

இல்லை!

நாடெங்கும் ஒருமுகமாக அமுல் நடத்தப்பட்டிருக்கிறதா, இந்தக் கல்வித் திட்டம்?

அதுவுமில்லை!

கிராமங்களிலேயுள்ள பள்ளிகளுக்கு மட்டுமேதான் இந்தக் கல்வித் திட்டமாம்; நகரங்களிலே உள்ள பள்ளிகளுக்கு இந்தத் திட்டம் அமுல் நடத்தப்பட்டாதாம்!

என் இந்த நிலைமை?

இந்தக் கல்வித் திட்டம் உண்மையிலே நல்ல பயன் தருமானால் அப்படிப் பயன் தரும் திட்டம் நகரத்துச் சிறுவர்களுக் கெல்லாம் கிடைக்காமல் போனதற்குக் காரணம் என்ன?

—இப்படியெல்லாம் கேட்கத் தோன்றும்; ஆனால் இதுவல்ல இதன் உண்மையான பின்னணி!

நகரத்திலேயுள்ள பள்ளிகளிலே 'இந்தத் திட்டம் திணிக்கப்பட்டால் கிராமத்தவர்களைவிட தெளிவு' பெற்ற நகரவாசிகள் ஆதாரக் கல்வி பயிற்றுவிக்கப்படும் எந்தப் பள்ளிக்கும் தங்கள் குழந்தைகளை அனுப்பி வைக்கமாட்டார்கள்! அதனால்தான் கிராமத்தவர்களை ஏமாந்த சோணகிரிகளாகக் கருதிக் கொண்டு; அந்தக் குழந்தைகளின்மீது துணிந்து தன்னுடைய சோதனைகளை நடத்தி வருகிறது, காங்கிரஸ் கட்சி!

இதுபற்றி ஆராய்ந்த கல்வி நிபுணர் ஒருவர் மேலும் கீழ்க்கண்டவாறு குறித்துத் தனது குறைகளைத் தெரிவித்திருக்கிறார்:

"இத்தகைய ஆதாரப் பள்ளிகளுக்கு வரும் பார்வையாளருக்குக் காட்டப்படும் நடப்பு நிகழ்ச்சிகளைக் கொண்டு, ஆதாரக் கல்வி முறையைப் பற்றி கற்பிக்கப்பட்ட கருத்தை உண்மை என்றே கருத வேண்டிய நிலை சாதாரணமாக ஏற்படுகிறது."

"உண்மையில், இந்த ஆதாரக் கல்விப் பள்ளியில் பயின்ற மாணவர்கள், சாதாரணப் பள்ளிகளில் படித்த மாணவர்களைவிட பின்தங்கியிருப்பதுடன் மட்டுமேல்லாது, தங்களுக்குக் கற்பிக்கப்பட்டதாகக் கூறப்படும் கைத் தொழில்களிலும் திறமையும், தேர்ச்சியும் இல்லாதவர்களாக உள்ளனர்.

"ஆதாரக் கல்வி ஆசிரியர்கள், மேற்பார்வையாளர்கள் ஆகியோர், "தொழில் முறைக் கல்வி என்பது, விழாக்களின்போது வருகை தரும் பார்வையாளர்களின் பொருட்டே ஒரு வழக்கமாகவும், ஏமாற்று வித்தையாகவும் அமுல் செய்யப்பட்டுள்ளது," என்று நம்புகின்றனர்.

"நாட்டிலுள்ள பல கிராமங்களைச் சுற்றிப் பார்த்த பின்னர், "ஆதாரப் பள்ளிகளில் கைத் தொழில் கற்பிக்கப்படுகிறது என்று கூறுவது மிகைப்படுத்தப்பட்ட கருத்தாகும்," என்றுதான் கருத வேண்டியுள்ளது. பல்கலைக் கழகங்களில் ஆசிரியர்கள் எளிதாகக் குறிப்புகள் தருவதுபோல, தொழிற் கல்வி ஆசிரியர்களுக்கும் எளிதாகக் கைத்தொழில் திறமை காட்ட முடிகிறது; ஆனால் மாணவர்கள் காலத்தை வீணாக்கிக் கொண்டு, தேர்ச்சியும் திறமையும் இல்லாது இருக்கின்றனர்; படிப்பைப் பற்றியோ, அறிவைப் பற்றியோ இரண்டாவதாகத்தான் அக்கறை காட்டப்படுகிறது!"

—அது மட்டுமோ?

ஆதாரக் கல்வியை கிராம இந்தியாவின் புனருத்தாரணத்துக்கான ஒரே திட்டம் என்று வானளாவப் புகழ்கிறார்களே; அப்படிப் புகழ்கிறவர்களில் எத்தனை பேர் தங்கள் வீட்டுக் குழந்தைகளை ஆதாரப் பள்ளிகளுக்கு அனுப்பிவைத்திருக்கிறார்கள்?

சென்னையில் பிரதமர் காமராசருக்காவது கவலையில்லை—அவர் கல்யாணமாகாதவர்—இந்தியாவின் பிரதமர் பண்டித நேரு தனது பேரக் குழந்தைகளை எங்கே படிக்க வைத்திருக்கிறார்?

ரவீந்திரநாத் தாகூரால் நிறுவப்பட்ட சாந்தினி கேதத்திலா?

இல்லை!

ஆதாரப் பள்ளிக்கூடங்களிலா?

அதுவுமில்லை!

அவருடைய பேரக் குழந்தைகள் எந்த ஆங்கிலம் பொது மொழியாக இருக்கக்கூடாது என்று பேசப்பட்டு வருகிறதோ; அந்த ஆங்கிலத்தின் பிறப்பிடமாம் இங்கிலாந்தில் படிக்கிறார்கள்!

மலேரியாக் கொசு பிறரைக் கடித்தால் அதனால் விளையும் தீங்குதனை அவர்கள் தாங்கமாட்டார்கள் என்று நினைத்து; கொசுக்களைத் தன்மீது மேய விட்டு; தன்னையே ஒரு சோதனைக் களமாக்கிக் கொண்டார், எட்வர்ட் ஜென்னர்.

ஆனால் இந்திய அரசியலில் தன்னலத்தையே பெரிதெனக் கொண்ட நடமாடும் 'அரசியல் ஜென்னர்'களோ தாங்கள் மட்டும் இரும்புக் கவசம் அணிந்து கொண்டு ஊர்மக்கள்மீது சோதனை நடத்துகிறார்கள்!

சோதனை நடத்துகிறவர்கள் காங்கிரஸ் கட்சிக் கூடாரத்தவர்!

இந்த அபாயகரமான சோதனைக்கு ஆளாகிறவர்களோ இந்த நாட்டுப் பொதுமக்கள்!

—இழிவும் ஆபத்தும் நிறைந்த இந்த நிலைமை என்றுதான் மாறுமோ?

சீனா யார்?

இந்தியாவின் நண்பன்.

மாசே துங் யார்?

உண்மையான மக்கள், சீனத்தின் தலைவன்.

உங்கள் வெளி நாட்டுக் கொள்கையின் நோக்கம் என்ன?

பஞ்சசீலம்; அதாவது எல்லா நாடுகளுடனும் சமத்துவமாகவும் சமாதானமாகவும் வாழ்வது.

அப்படியானால் அமெரிக்காவுடன் எப்போதும்போல் நட்புறவு கொண்டிருப்பீர்களா?

தாராளமாக!

ரஷ்யா பற்றி உங்கள் கருத்து என்ன?

—அவர்களும் எங்கள் நண்பர்கள்தான். நான் அமெரிக்காவிற்கும் செல்வேன்; சோவியத்திற்கும் செல்வேன். அமெரிக்க உப ஜனாதிபதியை இங்கு வரவழைத்து விருந்து வைப்பேன்; அதே நேரம் புல்கானின், குருஷேவுக்கும் பூமாலை சூட்டுவேன். 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்ற புறநானூற்றுப் பாடலைப் படிக்காவிட்டாலும் அதையே எனது வெளிநாட்டுக் கொள்கையாக வைத்துக்கொண்டிருக்கிறேன்.

உங்கள் வெளிநாட்டுக் கொள்கையை இன்னும் விளக்கமாக—

அன்னிய நாட்டு உதவி—அது வெறும் உதவி என்னும் பெரு நோக்கோடு இருந்தால்—அதைப் பெறுவதிலே தவறு ஏதும் இருக்க முடியாதுதான்!

திருப்பித்தருவதற்காக கடன் தொகை வாங்குவதிலும் குற்றம் ஏதும் கிடையாது!

—ஆனால் பண்டிதர் தனது பிரதிநிதியாக டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரை அமெரிக்காவிற்கு அனுப்பியிருப்பது பண்டிதருடைய சுயமரியாதை உணர்ச்சியை மட்டுமல்ல; இந்திய உப கண்டத்தின் தன்

டி. டி. கே. இந்திய உபகண்டத்தின் பொருளாதார வளர்ச்சிக்காகவும்; திட்டங்களின் பூர்த்திக்காகவும் அமெரிக்காவிடம் உதவி கேட்டிருப்பதாகத் தெரியவில்லை!

"கம்யூனிசத்துடன் போரிடுவதற்காகவும்; மீண்டும் 'கேரளம்' உருவாகாமலிருப்பதற்காகவும்; கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் தோழர் டாங்கேயிடமிருந்து புது டில்லியைக் காப்பாற்றுவதற்காகவும்; சோவியத் யூனியனிலிருந்தும் மக்கள் சீனத்திலிருந்தும் வருகின்ற ஆக்ரமிப்பைத் தடுப்பதற்



ளத்தில் இடதுசாரிக் கட்சி பதவிக்கு வந்ததா? அல்லது அந்த மாநிலத்து வளர்ச்சிக்கு மத்திய அரசாங்கம் போதிய அளவு தொகை செலவழிக்க முடியவில்லை என்கிற ஒரே காரணத்திற்காகப் பொது மக்கள் அந்தக் கட்சியைப் பதவிக்குக் கொண்டு வந்தார்களா?

அப்படி அந்த மாநிலத்தின் வளர்ச்சிக்கென போதிய தொகை செலவழிக்கப்படாததுதான் கேரளம் எதிர்க்கட்சி வசமானதற்குக் காரணமெனில்—எதிர்க் கட்சி பெரும்பான்மையளவு வெற்றி பெறாத இதர மாநிலங்களுக்கெல்லாம் மத்திய அரசாங்கம் தேவையான அளவு செலவு செய்து அந்தந்த மாநிலங்களின் வளர்ச்சிக்கு உதவியிருக்கிறதா? அவ்வாறு இல்லையெனில் போதிய அளவு தொகை கிடைக்கவில்லை என்று போரிடுகிற அஸ்ஸாம், சென்னை, ஆந்திரா போன்ற மாநிலங்களில் ஏன் கம்யூனிஸ்ட் கட்சி பெரும்பான்மையான இடங்களைப் பெற முடியவில்லை?

—இத்தனைக் கேள்விகளையும் அடுக்கடுக்காய் கேட்கத் தோன்றுகிறது, கிருஷ்ணமாச்சாரியாரின் விசித்திர விளக்கத்தைப் படித்த பிறகு!

இந்தியா வறுமையோடு போராடிக் கொண்டிருக்கிறது. அதன் மக்கட் தொகையில்

டி. டி. கே. யின் குசேலோபாக்யானம்!

ஆனால் சுருக்கமாகச் சொல்ல முடியுமா?

விளக்கம் என்ன? அமெரிக்காவைப் போலவேதான் நாங்கள் ரஷ்யாவையும் சீனாவையும் மதிக்கிறோம்; நடந்து கொள்கிறோம்!

—இப்படித்தான் இது நாள் வரை பண்டித நேருவின் வெளிநாட்டுக் கொள்கைக்கு விளக்கம் தரப்பட்டு வந்தது.

வெளிநாட்டு உதவியை நாங்கள் வரவேற்போம். ஆனால் அந்த உதவி எங்களைப் பிடிப்பதற்காக உபயோகிக்கப்படும் தூண்டில் புழுவாக இருந்தால், அந்த உதவி எவ்வளவு கோடிக்கணக்கான ரூபாய்கள் மதிப்புள்ளதாக இருந்தாலும் அதைத் தொடக்கூட மாட்டோம்.

சமீபத்தில்கூட பண்டிதர் பாராளுமன்றத்திலே இந்தப் பொருள்படும் விதத்திலே சங்கநாதம் முழக்கியிருக்கிறார்!

அவருடைய வாய்ச் சொற்களைப் போலவே அவருடைய கொள்கையும் அமைந்திருந்தால் மிகோன்னதமாகத்தான் இருந்திருக்கும்; 'எண்ணுவதை எண்ணியாங்கு முடித்து வைக்கும் மாவீரர் பாரீர்; கர்னல் நாசருக்கு அடுத்தபடி கிழக்கிலே தோன்றிய இரண்டாவது உதய சூரியன் காணீர்' என்று எல்லோரும் கைலாகு கொடுத்திருப்பார்கள்!

ஆனால் இன்றோ பண்டிதருடைய பேச்சுக்கள் அனைத்தும் 'யாக்கை நிலையாமை' என்பதைப்போல; 'பேச்சு நிலையாமை' என்னும் தத்துவத்தைத்தான் நிரூபித்துக் காட்டுவதாக இருக்கின்றன!

மானத்தையே வட்டி வேந்தர்கள் காலடியிலே அடகு வைப்பது போலிருக்கிறது!

இதுவரை இந்திய உப கண்டம் வெளிநாடுகளிலிருந்து கடனுதவி பெற்றிருக்கிறது; சர்வதேச பாங்கியிலிருந்தும்கூட அது உதவி பெற்றிருக்கிறது.

—இருந்தாலும் இந்த முறை அமெரிக்காவிலே டி. டி. கே. நடந்துகொள்ளும் விதம் உபயோகப்படாத கூழை மாட்டை சந்தையில் நிறுத்தி விலை பேசும் தரகன் நிலையிலே இந்திய உபகண்டத்தையே விலைக்கு விற்க முயலும் பான்மையாகத்தான் தொனிக்கிறது.

உண்மைக்கும், நியாயத்திற்கும் விடை கொடுத்து அனுப்பி விட்ட கடைசித் தர தரகன் கூழை வால் கொண்டிருக்கும் மாட்டுக்கு குதிரைவால் இருப்பதாகக் கதை விடுவான்; சர்க்கார் சாலைபோல் கோணலாக இருக்கும் கொம்புகளை மறைத்து, யானைத் தந்தம்போல கூட்டியின் கூர்மை கொண்ட கொம்புகள் இருப்பதாகக் கற்பனை பேசுவான்; கொண்டையிலே காகம் கொத்திக்கொத்தி சீழ் வடியும் புண்ணை மறைத்து, அது தீயில் சுட்ட வடு என்று முழுப் பூசணியை ஒரு கவளம் சோற்றுக்குள் மறைப்பதற்கு முயற்சிப்பான்!

உதவி கேட்கச் சென்றிருக்கும் டி. டி. கே. யின் நிலையும் அப்படித்தான் இருக்கிறது!

'நியூயார்க் டைம்ஸ்' ஏட்டின் நிருபருக்கு அவர் அளித்த பேட்டியின்போது அவர் கூறிய வாசகங்கள் பண்டிதருடைய வெளிநாட்டுக் கொள்கையை ஆழக் குழி தோண்டி மூடுவதாய் அமைந்திருக்கிறது.

காகவும்தான்" தான் அமெரிக்காவிடமிருந்து உதவிபெற வந்திருப்பதாக அவர் திட்டவட்டமாக; சிறிதும் ஒளிவு மறைவின்றி கூறியிருக்கிறார்!

"அமெரிக்கர்கள் புதுடில்லியின் கொள்கை கம்யூனிஸ்ட் சார்புடையது என்றுகருதிக்கொண்டிருக்கிறார்கள். இந்தியாவில் இப்போது நடக்கும் போராட்டம் கம்யூனிசத்திற்கு எதிரான போராட்டமும்கூட என்று நாங்கள் அவர்களுக்கு (அமெரிக்கர்களுக்கு) விளக்கம் தரவேண்டும்! நாங்கள் கேரள மாநிலத்தைக் கம்யூனிஸ்ட்களிடம் தோற்று விட்டோம்! அதற்கான ஒரு காரணம் அங்கே வளர்ச்சிக்கென போதுமான தொகையை எங்களால் செலவிட முடியாததுதான்!"

—மாட்டுக்கு நல்ல விலை பேசுவதற்காக டி. டி. கே. இருக்கின்ற குறைகளை மறைத்துப் பேசுகிறாரா; அல்லது இவர் சொல்கின்ற லட்சணங்களை உடையது தான் அந்த மாடா?—என்கிற சந்தேகம் எழுகிறது நமக்கு!

இந்திய உப கண்டத்திலே வறுமையையும், பட்டினியையும், பிணியையும், அறியாமையையும் எதிர்த்துப் போர் நடக்கிறதா? அல்லது டி. டி. கே. சொல்வதுபோல் பதவியில் அமர்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சி உண்மையிலேயே கம்யூனிசத்தை எதிர்த்துத்தான் போராட்டம் நடத்துகிறதா?

முன்பு பதவியிலிருந்த காங்கிரஸ் ஆட்சியின் ஊழலால்; ஊதாரித்தனத்தால்; துடுக்குத்தனத்தால்; அடக்குமுறைக் கொடுமையால் கேர

தொண்ணூறுக்கு மேற்பட்டோர் எழுத்தறிவின்றி அறியாமைச் சகதியிலே சிக்கிக் கொண்டு செய்வதறியாது தவிக்கின்றார்கள். நீங்கள் இந்த நல்ல தருணத்தில் உதவி செய்தால் இந்தியாவின் கோடானுகோடி மக்களும் உங்களுக்குக் கடமைப்பட்டவர்களாக இருப்பார்கள். இந்த நேரத்தில் கை கொடுங்கள்! காப்பாற்றுங்கள்!!

—இப்படி அமெரிக்காவிடம் 'அபயம்' கேட்டிருந்தால்கூட நாம் கிருஷ்ணமாச்சாரியாரைப் பாராட்டியிருக்கலாம்! ஆனால் அவரோ 'கம்யூனிசப் பூச்சாண்டி' காட்டி அமெரிக்கக் குழந்தைகளிடமிருந்து கடனுதவி பெற முயன்றிருக்கிறார்; உண்மைக் காரணத்தை ஒளித்து அமெரிக்காவை ஏமாற்றும் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்.

அவர் 'நியூயார்க் டைம்ஸ்' நிருபரிடம் மேலும் கூறியிருக்கிறார்:

"உதாரணமாக நண்பர் டாங்கேயை எடுத்துக் கொள்ளுங்கள். என்றாவது ஒரு நாள் அவர் 'நாங்கள் புரட்சிக்குத் தயார்!' என்று கூறலாம். அப்போது சோவியத் யூனியனோ அல்லது சீனாவோ அவருடைய உதவிக்கு வரலாம்.

"பிறகு நாங்கள் உதவிக்காக உங்களது நண்பர்களை நெருங்கலாம். சுமார் ஒரு மாதம்—உதவி வரும்வரை நாங்கள் தாக்குப் பிடிக்க வேண்டுமே!"

—இது கிருஷ்ணமாச்சாரியார் எழுப்பியிருக்கும் கூக்குரல்!

(தொடர்ச்சி பக்கம்—10)

6

நெருப்புக்கோளத்தைப்போல் தகதகத்த சூரியன் நீலத் திரைக் கடலில் மூழ்கிக் கொண்டிருந்தான். மாலை மஞ்சள் வெய்யில் சோமநாதபுரத்திற்குப் பொன் மெருகு தீட்டிக் கொண்டிருந்தது. சோமநாதபுரத்தின் பேரெழிலை இரவுத் தேவதை இருளென்னும் போர்வை கொண்டு மூடத் தொடங்கினாள். அந்த இருளின் பின்னணியில் வீடுகளில் ஆங்காங்கே எரிந்து கொண்டிருந்த அகல் விளக்குகள் நீல வானத்தில் கண் சிமிட்டி அழகு செய்யும் நட்சத்திரங்களுக்குப் போட்டியாயின.

மரணத்தோடு கடைசிப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கும் கணவனுக்கு வேண்டிய பணிவிடைகளை யெல்லாம் குறைவின்றிச் செய்து முடித்துவிட்டு, அவனையும் ஒருவாறு தூங்க வைத்தபின், குழந்தையையும் தக்கார் பொறுப்பிலே ஒப்படைத்து விட்டு, பிரதம புரோகிதனின் கட்டளையை நிறைவேற்றவும்—கணவனின் உயிரை எமன் களவாடிச் செல்லாமல் காக்கவும் சோமநாதரின் அருளை வேண்டித் தியானம் செய்ய புவனா ஆலயத்தை நோக்கிப் புறப்பட்டாள். பூஜைக்கு வேண்டிய பொருள்களையும் காணிக்கைக் குரிய தங்கத்தையும் மறக்காமல் எடுத்துக் கொண்டாள். தரத்திற்கேற்ற படி தட்சணை அளிக்காவிட்டால், சோமநாதர் அருள் சுரக்கமாட்டார் என்ற உண்மையை புவனா நன்றாக அறிவாள். காசின் அளவுக்கேற்ற படிதான் ஆண்டவனுடைய கருணையின் அளவும் இருக்குமென்று இந்துக்கள் மனமார நம்பினார்கள். புரோகிதர்களின் புளுகெல்லாம் புனிதத் தன்மை பெற்றிருந்த நேரம் அது; ஆண்டவனின் திரு நாமம் அயோக்கியத்தனங்களுக்கு அரணாக அமைந்திருந்த இந்து மதத்தின்—சனாதன தர்மத்தின்—பொற்காலம் அது!

புவனா ஆலயத்தை நோக்கி வேகமாக நடந்து கொண்டிருந்தாள். கோவிலில் வெண்கல மணி எழுப்பிய நாதம், 'ஓம் ஓம்' என்று ரீங்காரம் செய்து, சோமநாதபுரத்தின் கோட்டைச் சுவர்களில் எதிரொலித்துக் கொண்டிருந்தது. மணியோசை எழுப்பிய ஓங்கார நாதம் புவனாவின் உள்ளத்திலும் நிரம்பி புதிய நம்பிக்கையொளி தோன்றச் செய்தது. எங்கும் நிறை நாதப் பிரம்மமாக இருக்கும் சோமேஸ்வரரோடு அவளுடைய உள்ளமும் ஒன்றிக் கலந்தது. இன்னும் சற்று நேரத்தில் அவளுடைய பிரச்சினைகளுக்கு விடிவு ஏற்பட்டுவிடும்; சோமேஸ்வரரின் நாமத்தை அவள் ஜபிக்க ஜபிக்க, கணவனுடைய ஆயுள் பலம் பெறும்; அவளுடைய மாங்கல்யம் பிழைக்கும்; அக்கினிக்கு அவளை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டிய அவசியம் இருக்காது! இருண்டு சூன்யமாகிக் கிடந்த அவளுடைய உள்ளத்தில் நம்பிக்கை பளிச்சிட்டது; பட்ட மரம் துளிர்ப்பது போன்ற உணர்ச்சி அவளுக்கு ஏற்பட்டது!

கால்கள் புது பலம் பெற்று நடை துரிதமாகிறது; கண்கள் புது ஒளிபெற்றன; வாய் பாட்டிசைத்தது!

சிறிது நேரத்திற்கெல்லாம் சோமநாதர் ஆலயத்தின் பிரம்மாண்டமான கோபுரம் அவளை வரவேற்றது.

நகரத்தின் மேட்டுப்பாங்கான இடத்தில், கைதேர்ந்த சிற்பிகளின் கைவண்ணத்தால் உருவான கலைக்கோயில்தான் அந்த தேவாலயம். இந்திய சிற்பக் கலையின் எழிலனைத்தும் அந்த ஆலயத்தில் அடைக்கலம்புகுந்திருந்தது. மாபெரும் பாறைகளைத் தங்கள் மனோதர்மத்தால் சிலையாக்கி—சிற்பமாக்கி—கலையிலே தெய்வீகத்தையும், தெய்வீகத்திலே கலையையும் கண்ட எண்ணற்ற சிற்பிகள், ஆண்டு பல அரும்பாடுபட்டு ஆக்கித் தந்த கலைச்செல்வம் சோமநாதர் ஆலயம். இந்துஸ்தானத்தினுடைய சிற்பக் கலையின் உயர்வை அளந்து காட்டுவதுபோல் ஆகாயத்தை அளாவி நின்றது கோபுரம். சுமார் நானூறு அல்லது ஐநூறு கஜம்வரை மதிற் சுவர்களால் சூழப்பட்டு மரங்கள டர்ந்த நீண்ட பாதை; பாதையின் முடிவில் கோபுரம்! கோபுரத்தையும், அதைச் சுற்றியுள்ள மண்டபத்தையும் தாங்கி நிற்க பிரம்மாண்டமான உயர்ந்த தூண்கள்; ஒவ்வொரு தூணும் ஒரே கல்லினால் செதுக்கப்பட்டது! தூண் ஒவ்வொன்றிலும் பாரதக் கதையை விளக்கும் சிற்பங்கள்!

ஆலயத்தின் மத்தியில் மிகப் பெரிய லிங்கமொன்று பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது. லிங்கத்தின் மேனியெங்கும் நவரத்தினங்களும் பதிக்கப்பட்டு ஒளி வீசிக் கொண்டிருந்தன. அதன் கண்களாக மிகவும் விலையுயர்ந்த இரு நீலங்கள் பதிக்கப்பட்டிருந்தன. அந்த நீலக் கற்களின் பிரகாசமும், இதர மணிகளின் ஒளியும் சேர்ந்து அந்த விக்ரகத்திடம் பார்ப்போருக்கு பக்தியையும் ஒருவித அச்சத்தையும் தோற்றுவித்தது. சோமநாதபுரத்தின் சரித்திர பிரசித்தி பெற்ற அந்தச் சிலைக்கு முன்னால் பெரிய பிரகாசமான விளக்கொன்று தொங்கிக் கொண்டிருந்தது; வேறு விளக்கெதுவும் எரியவில்லை.

மண்டபத்தின் இரு புறங்களிலும் தேவகாரியம் செய்வதற்கான அறைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. சிலையை ஒட்டினாற்போல் பிரதம புரோகிதனின் தனி அறையொன்றும் இருந்தது. ஆலயத்திற்கு வழிபாட்டிற்காக வரும் பக்த கோடிகளுக்கு இந்தப் 'புனித' அறைகள் காட்டப்படுவதில்லை. உலகத்தின் ஆசாபாசங்கள் அத்தனையும், இந்துஸ்தானத்தின் மிகவும் ஆற்றல் படைத்த தெய்வம் என்று கருதப்பட்ட சோமேசரின் சந்நிதானத்தில், பகலிலே பக்தி வேஷமும்—இரவிலே இன்ப லீலைகளும் நித்ய கர்மானுஷ்டானங்களாகக் கொண்ட பூசுரர்களால் நடத்தப்பட்டன. புனித ஆலயம் பூதேவர்களின் காமக் களியாட்டக் கூடமாக இருந்தது. ஆண்டவனிடத்தில் மக்களுக்கிருந்த அசையாத நம்பிக்கை, புரோகிதர்களின் வஞ்சக வாழ்விற்கு மூலதனமாயிற்று. உழைத்து உழைத்து, இந்துஸ்தானத்து மக்கள் ஈட்டிய பொருளெல்லாம், சோமநாதர் ஆலயத்திற்குக் கொட்டிக்கொடுக்கப்பட்டது. பொன்னையும் பொருளையும் தாங்கி நிற்கும் கிடங்காக மாறிய சோமநாதர் ஆலயம், சூதும் வாதும் நிரம்பிய சுகபோகிகளின் மடமாகி, வேற்று நாட்டு மன்னர்களுக்கு ஆசையூட்டி நின்றது.

பக்தி சுரக்கும் விழிகளோடு, தன்னுடைய ஆசைகளுக்கு சோமநாதர் அங்கீகாரம் அளிக்கப் போகிறார் என்ற நம்பிக்கையோடு, புரோகிதரின் ஆசீர்வாதத்தை எதிர் நோக்கி ஆலயத்திற்குள் நுழைந்தாள் புவனா! அங்கே வழக்கத்திற்கு மாறாக நிலவியிருந்த நிசப்தம் அவளுடைய உள்ளத்தில் பயத்தை உண்டாக்கியது. மனதை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டு, சோமநாதர் சிலையின் முன் மண்டியிட்டு தலையை மூன்று முறை நிலத்தில் முட்டி நமஸ்காரம் செய்தாள். பின், கொண்டு வந்திருந்த பொருட்களைப் படைத்துவிட்டு, தங்கத்தையும் உண்டியலில் சேர்த்த பின், சிலையின் முன் அமர்ந்து, மாங்கல்யம் பலம்பெற தன்னை மறந்து தியானத்தில் ஈடுபட்டாள். வாய் சோமேசரின் திருநாமத்தை ஜபிக்கத் தொடங்கியது. அந்த அசாதாரண அமைதியில் அவள் குரல் எழுப்பிய மென்மையான ஓசைகூட மண்டபத்தில் எதிரொலித்து அவளோடு பேசியது. கணவன் உயிர் பிழைக்க வேண்டுமென்ற ஆசையும் ஆலயத்தின் அதீத சக்தியில் அவளுக்கிருந்த நம்பிக்கையும் சேர்ந்து, மெய் மறந்து அவளை தியானத்தில் ஈடுபடச் செய்தது. எவ்வளவு நேரம் அவள் அப்படி இருந்தாளோ தெரியாது. திடீரென்று எங்கும் இனிய இசை கிளம்பியது; இசைக் கருவிகள் இன்ப கானம் பொழிந்தன; காற்சதங்கை 'கலீர், கலீர்' என ஒலித்தன; தாளம் லயம் கூட்டியது; ஒரே இசைப் பிரவாகம்! இன்பப் பிரவாகம்!!

சோமேசரின் திருவருள் கூடி விட்டது என அவள் எண்ணினாள். அருள் பாலிக்கும் திருவுள்ளத்தோடுதான்—இசை முழக்கத்தோடு ஆண்டவன் பிரசன்னமாகிக் கொண்டிருக்கிறான் என எண்ணி, நிஷ்டை கலைந்த விசுவாமித்திரர்போல் கண்விழித்துப் பார்த்தாள். ஆலயமெங்கும் ஒரே தகத் தகாயம்! இப்பொழுது மண்டபத்தின் எல்லா விளக்குகளும் பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தன. அந்த ஒளியில் சோமேசரின் மேனியில் பதித்திருந்த கற்கள் ஒளி வீசிக் கண்களைப் பறித்தன. இசைக் கருவிகள் இன்னிசை பாட, காற் சதங்கைகள் ஜதிதாளம்போட, கண்கள் சுழன்று நர்த்தனமாட, கைகள் நெளிந்து பாவங்கள் பேச, தென்றலென ஓடி, மயிலென ஆடிக் கொண்டிருந்தார்கள் ஆலயத்தின் தேவதாசிகள்! அவர்களுடைய ஆட்டமும் பாட்டமும் கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. காண்பது கனவல்ல என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள புவனா ஒருமுறை கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டாள். ஆம்; புரோகிதர் கூறியது எவ்வளவு உண்மை! இந்த ஆலயம்; வெறும் 'ஆலயம் மட்டுமல்ல! ஒரு பெரிய கலைக்கூடம்! இசை மன்றம்! இன்பக்கேணி! என்ன பெயரிட்டு அழைத்தாலும் பொருந்தும்!!

நாட்டியத்திலும் இசையிலும் மனத்தைப் பறிகொடுத்து சிறிது நேரம்வரை திக்பிரமை பிடித்து நின்றாள். திடீரென்று எங்கிருந்தோ மணியோசை கேட்டது. விளக்குகள் உடனே நின்றன. இசையும் தாளமும் இருந்த இடம் தெரியாமல் மறைந்தன. நாட்டியக்காரிகள் ஓடுவதால் சதங்கைகள், செய்யும் ஓசை 'கல கல' வென ஒலித்து, சிறிது நேரத்தில்

[தொடர்ச்சி பக்கம்—8]

செந்தமிழுக்கே தீமை வந்த பின்னும் இந்தத் தேகம் இருந்தொரு லாபமுண்டோ?

> இந்தி மொழி இலக்கிய[…] மொழி; இற்றைக்கு ஐந்நூறு ஆண்டுகளுக்கு[…] தோன்றிய மொழி; அது எந்த விதத்திலும் இந்த [நா]ட்டிற்குப் பொது மொழியாக இருப்பதற்குத் தகுதியல்[…] தமிழர்மீது திணிப்பது தமிழ் மொழியைக் [கு]ழிப் புதைப்பதற்காகச் செய்யப்படும் ஏற்பாடு[…]தை திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமல்ல[…] உண்மையான பற்றுக் கொண்டோர் அனைவரு[…]றனர்.
>
> —இந்தக் கருத்துக்கள் அ[…]மே "பேராசிரியர் **மறைமலையடிகளார்** அ[…] **'இந்திப் பொது மொழியா?'** என்[…] விளக்கியிருக்கிறார்கள். இந்த நூலின் முக்கிய ப[…]கே தரப்படுகின்றன.

இந்தி வேண்டாம்!

இந்தி மொழியானது வடநாட்டவரெல்லாரானும் பொது மொழியாக வைத்துப் பேசப்படுகின்றதென்பது உண்மையாகாது. ஏனென்றால், அது வடக்கே பற்பல நாடுகளில் பற்பல மாறுதல்களோடு பேசப்படுகின்றதே அல்லாமல், அஃதெங்கும் ஒரே வகையாகப் பேசப்படவில்லை. அங்கே ஒரு நாட்டவர் பேசும் இந்தியை அதற்கடுத்த நாட்டிலுள்ளார் தெரிந்து கொள்ள மாட்டாதவராயிருக்கின்றனர். இங்ஙனம் பலவகை மாறுதல்களுடன் பேசப்படும் இந்தி மொழியை ஆராய்ச்சி செய்த ஆசிரியர்கள் அதனை 'மேல்நாட்டு இந்தி', 'கீழ்நாட்டு இந்தி', 'பீகாரி' என்னும் மூன்று பெரும் பிரிவுகளாகவும், அப்பெரும் பிரிவுகளுள் ஒவ்வொன்றும் பல பிரிவுகளாகவும் பகுத்துள்ளனர். கங்கையாற்றுக்கு மேற்கே, பஞ்சாபின் தென் கிழக்கில் மேட்டுப் பாங்கான ஊர்களிற் பேசப்படுவது 'பாங்காரு' எனவும், வட மதுரையிலும் அதனைச் சூழ்ந்த இடங்களிலும் பேசப்படுவது 'பிரஜ் பாஷா' எனவும், கங்கைக்கும் யமுனை யாற்றுக்கும் இடையேயுள்ள நாடுகளின் தெற்கிற் பேசப்படுவது 'கனோஜ்' எனவும், பந்தல்கண்டிலும் நருமதையாற்றை யடுத்த இடங்களிலும் பேசப்படுவது 'புந்தேலி' எனவும், தில்லி நகரத்திலும் அதனைச் சூழ்ந்த ஊர்களிலும் பேசப்படுவது 'உருது' எனவும் வழங்கப்படுகின்றன. இவ்வாறு இந்தியாவின் வட மேற் பகுதிகளிற் பேசப்படும் இவ்வைந்து மொழிகளும் 'மேல் நாட்டு இந்தி' என்னும் பெரும் பிரிவில் அடங்குவனவாகும்.

இனிக், 'கீழ்நாட்டு இந்தி' என்னும் பெரும் பிரிவில் அடங்குவன: 'அவதி', 'பகேலி' 'சத்தீஸ்கரி' என்னும் மொழிகளாகும். இம்மூன்று மொழிகளுள்ளும், 'அவதி' என்பதே முதன்மையுடையதாய் 'அயோத்தி' நாட்டின்கண் வழங்குகின்றது.

இனிப், 'பீகாரி' என்னும் பெரும் பிரிவில் அடங்குவன: 'மைதிலி', 'போஜ்புரி', 'மகதி' என்னும் மொழிகளாகும். இம்மூன்றனுள் முதன்மை வாய்ந்தது கங்கை யாற்றின் வடக்கே மிதிலை நாட்டில் வழங்கும் 'மைதிலி' என்னும் மொழியேயாகும். இப்போது இந்தி மொழி நூல்களென வழங்கப்படுவன வெல்லாம் இந்த மைதிலி மொழியிலேதான் எழுதப்பட்டிருக்கின்றன. இன்னும் இந்தி மொழியின் பிரிவுகளாக ஆங்காங்கு வடநாட்டின்கண் பேசப்படும் சிறு சிறு மொழிகள் மேலும் பற்பல உள. இவ்வாறு இந்தி மொழியின் பல பிரிவுகளாக வழங்கும் பற்பல மொழிகளைப் பேசும் பற்பல நாடுகளில் உள்ளாரும், ஒரு நாட்டவர் மொழியை மற்ற நாட்டவர் அறியாராய் உயிர் வாழ்ந்து வருதலின், இந்தி அவரெல்லார்க்கும் தெரிந்த பொது மொழி என்றுரைப்பாருரை எங்ஙனம் பொருந்தும்? எங்ஙனம் உண்மையாகும்? இங்ஙனம் பற்பல நாடுகளிற் பற்பல மாறுதல்களுடன் வழங்கும் பல்வேறு இந்தி மொழிகளில் எதனை இத்தென்னாட்டவர் கற்றுத் தேர்வது? எதனை இவர் கற்றாலும் அதனுதவி கொண்டு இவர் வடநாட்டவரெல்லோரோடும் பேசுதல் இயலுமா? இயலாதே! மேற்குறித்த இந்தி மொழிகளேயன்றிச் 'சிந்தி,' 'லந்தி,' 'பஞ்சாபி,' 'குஜராத்தி,' 'ராஜபுதானி,' 'குமேயனி,' 'கடுவாலி,' 'நேபாலி,' 'உரியா,' 'வங்காளி,' 'மராட்டி,' 'சிறு,' 'காஷ்மீரி,' 'கோகிஸ்தானி,' 'சித்ராலி,' 'திராகி,' 'பஷை,' 'கலாஷா,' 'கவர்படி' முதலான இன்னும் எத்தனையோ பல மொழிகளும் வடக்கே பற்பல நாட்டின்கணுள்ள பற்பல மாந்தர்களாலும் பேசப்பட்டு வருகின்றன. இம் மக்கட் பெருங் கூட்டத்துடனெல்லாம் இந்தி மொழியில் ஒன்றை மட்டுந் தெரிந்த தென்னாட்டவர் உரையாடி அளவளாவுதல் கூடுமோ? சிறிதுங் கூடாதே. வடநாட்டவரிலேயே இந்தி மொழியை அறியாமற் பலதிறப்பட்ட பன்மொழிகளை வழங்கும் மக்கட் கூட்டம் பலவாயிருக்க, இத்தென்னாட்டவர் மட்டும் இந்தி மொழியைக் கற்றுப் பேசுதலால் யாது பயன் விளைந்திடக் கூடும்? இவ்வியல்புகளையெல்லாம் நடுநின்று எண்ணிப் பார்க்கவல்ல அறிஞர்க்கு, இத்தென்னாட்டவர்கள் தமக்கு எவ்வகையிலும் பயன்படாததும் தெரியாததுமான இந்தி மொழிகளில் ஒன்றை வருந்திக் கற்றலால் வீண் காலக் கழிவும் வீண் உழைப்பும் வீண் செலவும் உண்டாகுமேயல்லாமல், வேறு ஒரு நன்மையும் உண்டாகாதென்பது நன்கு விளங்கும்.

இந்தி மொழி வரலாறு

மற்று, இந்தி, உருது முதலான வடநாட்டு மொழிகளோ தமிழைப்போற் பழமையானவைகள் அல்ல; மகமதிய மதத்தவரான மொகலாய அரசர்கள் வடநாட்டின்மேற் படையெடுத்துப் போந்து, 'தில்லி'ப் பட்டினத்தைத் தலைநகராய்க் கைக்கொண்டு, அதன்கண், அரசு வீற்றிருக்கத் துவங்கிய பின்னே அம்மொழிகள் தோன்றியனவாகும். 'மகமது கோரி' என்னும் துலுக்க மன்னன் வடநாட்டின்மேற் படையெடுத்துப் போந்து, இந்திய அரசர்களை வென்று, அதனைக் கைக்கொண்டது கி. பி. 1175-ஆம் ஆண்டின் கண்ணதாகும். அதாவது இற்றைக்கு 773 ஆண்டுகட்கு முன்னதாகும். அதுமுதல் துலுக்க மன்னரது ஆட்சியானது நாளுக்கு நாள் வேரூன்றி வரலாயிற்று. கடைசியாக மகமது பின் துக்லக்கு என்னும் மன்னனால் கி. பி. 1340-ஆம் ஆண்டில் துலுக்க அரசு தில்லிநகரில்நிலைபெற்றது. அக்காலத்தில் தில்லி நகரிலும், அதனைச் சூழ்ந்த இடங்களிலும் பிராகிருதச் சிதைவான ஒரு மொழி வழங்கிக் கொண்டிருந்தது. அப்போது அது வெறும் பேச்சு வழக்கில் மட்டும் இருந்ததல்லாமல், நூல் வழக்கில் சிறிதும் இல்லை. ஏனென்றால், அது நாகரிகமில்லா மக்களாற் பேசப்பட்டுப் பலப்பல மாறுதல்கள் அடைந்த வண்ணமாய் நடைபெற்று வந்ததனாலும், அறிவுடையோர் தோன்றி, அம் மொழியைச் சீர்திருத்தி இலக்கண இலக்கிய நூல்களியற்றி, எழுத்து வடிவில் அதனை நிலைப்படுத்தி வையாததனாலும் அதற்கு அந்நாளில் நூல்வழக்கு இலதாயிற்று. தில்லியில் துலுக்கரரசு நிலை பெற்றபின், அவர் கொணர்ந்த அராபிமொழி பாரசிக சொற்கள் அம்மொழியின்கண் ஏராளமாயக் கலக்கப் பெற்று, அவரால் அஃது 'உருது' எனவும் பெயர் பெறலாயிற்று. 'உருது' என்னுஞ் சொல்லுக்குப் பொருள்பாசறை பாடி அல்லது படை வீடு என்பதேயாகும். எனவே, துலுக்க மன்னர் தாம் கைக்கொண்ட நகரையடுத்து முன்னமேபேசப்பட்டு வந்த பிராகிருதச் சிதைவான ஒரு மொழியில், தாம் கொணர்ந்த அராபிச் சொற்களையும் பாரசிகச் சொற்களையும் கலந்து, தமது பாசறையிருப்பின்கட் பேசிய கலவை மொழியே அவரது காலந் தொட்டு 'உருது' மொழியெனப் பெயர் பெற்று நடைபெறலாயிற்று. இதனால் 'உருது' என்பது துலுக்க மன்னரது படை வீட்டு மொழியாய் முதற்றோன்றி நடைபெற்ற வ[ரலாறு] நன்கு விளங்கா நிற்கும்.

அதன் பின், நூல் வழக்குடை[…]யதாய இஞ்ஞான்று வழங்கு[…] இந்தி மொழியானது 'லல்லு[…]ஜிலால்' என்பவரால் உருது[…] மொழியினின்றும் பிரித்துச் [சீ]திருத்தஞ் செய்யப்பட்டதொ[…]ருகும். இதற்கு முன் உள்[…]தான பிராகிருதச் சிதை[…] மொழியிற் கலந்த பாரசிக அ[…]பிச் சொற்களை அறவேயொழி[…]துச் சமஸ்கிருதமொழிச் சொ[…]களை மிகுதியாக எடுத்து[…] சேர்த்து, அவர் இ[…] மொழியைப் புதிதாய் உ[…]டாக்கினர். இங்ஙனம் அவரா[ல்] ஆக்கப்பட்ட இந்தி மொழ[…]கும், இதற்கு முன்னை தொ[…] நாகரிகமில்லா வடநாட்டு ம[…]ளால் ஆங்காங்குப் பேசப்ப[…] பிராகிருதச் சிதைவான இ[…] மொழிக்கும் வேறுபாடு மி[…]யாய் இருக்கின்றது: அதற்[…] காரணம் என்னென்றால் மு[…]னையது வடசொற்கலப்பு மி[…] உடையதாயிருத்தலும், பின்[…]யது அஃதின்றிப் பிராகி[…] மொழிகளின் சிதைவாயிரு[…]லுமே யாமென்பதனை நன்[…] நினைவிற் பதித்தல் வேண்[…] ஆகவே, வடசொற் கலப்பி[…] ஆக்கப்பட்டுச் சிறிது காலம[…] இப்போது நூல் வழக்கி[…] கொணரப்பட்டிருக்கும் இ[…] மொழியை நம் தென்னா[…]வர் கற்றுத் தெரிந்து கொள்[…]ளால், இவர்கள் வடநாட்[…]ரெல்லோருடனும் பேசி […] வளாவிடக்கூடும் என்று […] மடிகட்டி நின்று கூறுவது […] மனோரை ஏமாற்றும் […]யுரையேயாம்.

இந்தி மொழி நூல்கள்

இனி, மேற்காட்டிய கலப்[…] புது மொழியான இந்தி[…] நூல்கள் உண்டான வர[…]றைச் சிறிது விளக்குவாம்[…] பி. 1400-ம் ஆண்டு முதல் 1[…] ஆம் ஆண்டு வரையில், […]வது இற்றைக்கு 478 ஆ[…] களுக்கு முன்னிருந்த […] மானந்தர்' எனப் பெயரிய[…] துறவி இராமனையே முழு[…] கடவுளாக வைத்து வழி[…] வேண்டுமென வற்புறு[…]

★
ஆசிரியர் மு. க. வின்
கவிதை நடைச் சிறுகதை!
'முத்தாரம்' அக்டோபர் இதழில்!
இப்பொழுது விற்பனையாகிறது!

[…]தில்லி, வடநாட்டின்கண் பல[…]ங்களிலும் இராம வணக்[…]தைப் பரவச் செய்து வந்[…]ர். கல்வியறிவில்லா வடநாட்[…] பொது மக்கட்கு, இராமன் […] தந்தையின் கட்டளையால் […]சு துறந்து, கானகம் ஏகி, […]க்கு தன் மனையாளைப் பறி[…]டுத்து அடைந்த துயரக் […]த மிக்கதொரு மனவுருக்[…]தை உண்டாக்கி, அவரை […]ல்லாம் எளிதிலே இராம [வ]ணக்கத்தின் பாற்படுப்பித்[…]து. இராமானந்தர் இராமன் […]ற் பாடிய பாடல்கள்தாம் […]ன் முதல் இந்தி மொழியில் [உ]ண்டானவை; அதனால் அவ[…]டைய பாடல்கள் அடங்கிய […]திமொழி நூல் 'ஆதிகிரந்தம்' […] வழங்கப்படுகின்றது.

இனி, இராமானந்தர்க்குப் […], அவர்தம் மாணாக்கருள் […]வரான 'கபீர்தாசர்' என்ப[…] இற்றைக்கு 441 ஆண்டு[…]க்குமுன் காசி நகரில் தோன்[…]ர். நெசவுத் தொழில் செய் […] ஒரு மகம்மதிய குடும்பத்[…] இவர் பிறந்தவரென ஒரு[…]ரும், ஒரு பார்ப்பனக் கைம்[…]ணுக்கு இவர் பிள்ளை[…]ப் பிறந்து, அவளாற் கை[…]ப்பட்டுப் பிறகு 'நீரு' எனப்[…]யரிய ஒரு மகம்மதிய நெசவுக்[…]ரால் எடுத்து வளர்க்[…]பட்டவரென மற்றொரு[…]ருங் கூறுகின்றனர். இவ[…], கடவுளை இராமன், அரி, […]விந்தன், அல்லா என்னும் […]யர்களாற் பாடி வழுத்தினர். […]லும், கடவுள் பல பிறவி (அவதாரங்கள்) எடுத்தா[…]னக் கூறுவது அடாதென்[…], இறைவனைக் கல், செம்பு, […]டைவடிவில் வைத்து வணங்[…]ல் பெருங் குற்றமாகுமென்[…], இந்து சமயக் கிரியைகளும் […]ங்குகளும் பொருளற்ற புன்[…]ல்களாகுமென்றும் இவர்[…]டைய பாடல்களில் மிக[…]டுமையாக மறுத்துப் […]டியிருக்கின்றார். இந்தி மொழி[…] மற்றொரு பிரிவான 'அவதி' […]ழியில் இவருடைய பாடல் […] பாடப்பட்டிருக்கின்றன.

[…]இந்தியின் மற்றொரு பிரிவான […]திலி' மொழியைக் கற்பவர் […]'அவதி' மொழியிலிருக்கும் […]தாசரின் பாடல்களை எளிதிலே அறிந்து கொள்ளல் இயலாது.

தாம் இயற்றிய 'விப்ரமதீசி' என்னும் செய்யுள் நூலில் கபீர்தாசர் பார்ப்பனருடைய கொள்கைகளை மிகக் கடுமையுடன் தாக்கி மறுத்திருக்கின்றார். கபீர்தாசர் இந்தி மொழியில் இயற்றிய செய்யுள் நூல்கள் பற்பல. இவர் இறந்த பின், இவர்தம் மாணாக்கர் இயற்றிய நூல்களும் இவரது பெயரால் வழங்கப்படுகின்றன. கபீர்தாசருடைய பாடல்கள் இந்தி மொழியில் உண்டான பிறகுதான், அதாவது சென்ற நானூறு ஆண்டுகளாகத்தான் இந்தி மொழியின் ஒரு பிரிவுக்கு ஓர் ஏற்றமுண்டாயிற்று.

இனிக், கபீர்தாசருக்குப்பின், அவர்தம் மாணாக்கரான 'நானக்' என்பவர் 'சீக்கிய மதத்தைப்' பஞ்சாப் தேயத்தில் உண்டாக்கினர். இவருடைய பாடல்கள், பஞ்சாபியும் இந்தியும் கலந்த ஒரு கலப்பு மொழியிற் பாடப்பட்டிருத்தலால், இந்தியைப பயிலும் நம் நாட்டவர் இவருடைய பாடல்களையும் எளிதிலே அறிந்து கொள்ளல் இயலாது.

இனி இற்றைக்கு 491 ஆண்டுகளுக்கு முன், தர்பங்கா மாகாணத்தின்கண் உள்ள 'பிசபி' என்னும் ஊரில் 'வித்யாபதி தாகூர்' என்னும் பெயர் பூண்ட வைணவர் ஒருவர் தோன்றிக், கிருஷ்ண மதத்தை உண்டாக்கி, அதனை வடகீழ் நாடுகளில் மிகவும் பரவச் செய்தார். இந்தி மொழியின் மற்றொரு பிரிவான 'மைதிலி' மொழியில் இவர் கண்ணனுக்கும் அவன் காதலி இராதைக்கும் இடையே நிகழ்ந்த காதல் நிகழ்ச்சிகளை விரித்துப் பல பாடல்களைப்பாடியிருக்கின்றார். இப்பாடல்களையே பின்னர் 'பங்காளி' மொழியிற் 'சைதன்யர்' என்பார் மொழி பெயர்த்து, அவற்றை வங்காள தேயமெங்கும் பரவ வைத்தனர். இது கொண்டு, இந்தி மொழி வங்காள தேயத்திலுள்ளார்க்குள் வழங்காமை அறியப் படுகின்றதன்றோ? வடநாட்டிற் பெரும் பரப்பினதான வங்காளத் தேயத்தார்க்கே தெரியாததான இந்தி மொழியைத் தென்னாட்டிலுள்ளோர் பயின்றாலும், இவர்கள் வங்காள மக்களுடன் அதிற்பேசி உறவாட முடியாதன்றோ?

இன்னும் இங்ஙனமே கபீர்தாசர் காலம் முதல், அதாவது சென்ற 500 ஆண்டுகளாக வடநாட்டின் கட்டோன்றி இராம கிருஷ்ண வணக்கங்களை இந்தியின் உட்பிரிவான சில மொழிகளில் உயர்த்துப்பாடிஅவற்றை வடநாடுகளில் பரவச் செய்த இந்திமொழிப் புலவர்களின் வரலாறுகளை யெல்லாம் எடுத்துரைக்கப் புகுந்தால் இக்கட்டுரை மிக விரியும். ஆதலால், இதுவரையிற் கூறியது கொண்டு, இந்தி மொழியானது 500 ஆண்டுகளுக்கு முன் நூல் வழக்கில்லாமல், கல்வியறிவிலலா வடநாட்டு மக்களால் அந்நாட்டின் பல பகுதிகளிலும் பலவாறு திரித்துப்பேசப்பட்டு, ஒரு பாலார் பேசும் மொழி மற்றொரு பாலார்க்குத் தெரியாத வண்ணம் வழங்கினமையால், அஃது இஞ்ஞான்றுங்கூடப் பற்பல மொழியாகவே பிரிந்து வழங்குகின்றதென்பதும், அதனால் இந்தியை வட நாட்டவர் எல்லார்க்கும் பொது மொழி யெனக் கூறுவாருரை மெய்யாகாதென்பதும், ஆகவே இத்தென்னாட்டவர் இந்தியைப் பயிலுதலால் அதனுதவி கொண்டு வட நாட்டவரெல்லாரோடும் உரையாடி உறவாடல் இயலாதென்பதும் நன்கு விளங்கா நிற்கும்.

இனி, இந்தி மொழிகள் நாலு கோடி மக்களாற் பேசப்படுதலாகிய தொகை மிகுதியை வற்புறுத்திக் காட்டுவார்க்கு வங்காள மொழி ஐந்து கோடி மக்களாலும், தமிழும் தமிழோடினமான மொழிகளும் ஆறுகோடி மக்களாலும், பேசப்படும்பெருந்தொகை எடுத்துக் காட்டப்படும். இந்தியைப் பொதுமொழியாக்கல் வேண்டுமென்று ஒரு சாரார் கூறுவரேல், அதனினும் பெருந்தொகையினரான மக்களாற் பேசப்படும் வங்காள மொழியைப் பொது மொழியாக்கல் வேண்டுமென்று வங்காளரும், இவ்விந்திய நாட்டின் நால் எல்லைவரையிலும் பரவியிருக்கும் திராவிட மக்கள் எல்லோர்க்கும் முதன் மொழியாவதும், இந்தியாவின் மட்டுமே யன்றி இலங்கை, பர்மா, மலாய், தென் ஆப்பிரிக்கா முதலான நாடுகளிற் குடியேறி வாணிக வாழ்க்கையில் சிறந்தாராயிருக்கும் தமிழ் மக்கள் அனைவராலும் வழக்கப்படுவதுமான தமிழையே பொதுமொழியாகப் பயிலல் வேண்டுமென நந்தமிழ் மக்களும் வலியுறுத்து வரல்லரோ?

ஆங்கிலம் தேவையே!

இவ் விந்திய தேயத்தின் மட்டுமேயன்றி இவ்வுலகம் எங்கணும் அழுந்திப் பயிலவும், பேசவும், வழங்கவும் பட்டுவரும் ஆங்கில மொழியொன்றே உலக முழுமைக்கும் பொது மொழியாய்ப் பரவிவருதலால், அது தன்னையே நம் இந்து மக்கள் அனைவரும் பொது மொழியாய்க் கைக்கொண்டு பயிலுதலும் வழங்குதலும் அவர்கட்குஎல்லா வகையான நலங்களையும் தருவனவாகும். முதலில் உலகியல் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள் கிடைக்கூட்டுதற்கு எத்தொழிலைச் செய்வதாயிருந்தாலும், அத்தொழில் நுட்பங்களை நன்கறிந்து செய்வதற்குதவி செய்யும் பல்லாயிரக் கணக்கான தொழிலறிவு நூல்கள் ஆங்கில மொழியிலன்றி வேறெதிலேனும் இருக்கின்றனவா? பல்வகை கைத்தொழில்களைப் புரியுங்கால், அவற்றிற்கு வேண்டும் பல்வகைப் பண்டங்களைப் பல நாடுகளிலிருந்து வருவித்தற்கும், அவற்றால் தாம் செய்து முடித்த பண்டங்களைப் பல நாடுகளிலும் விலை உயர்த்தி விற்று ஊதியம் பெறுவதற்கும் ஆங்கில மொழியேயன்றி வேறெதுந் துணை செய்யுமோ? செய்யாதே! இன்னும் உலகமெங்கணும் நடைபெறும் வாணிகமெல்லாம் ஆங்கில மொழியின் உதவி கொண்டே நன்கு நடைபெறுதலை அறிந்து வைத்தும், அதனைப், பொது மொழியாக வழங்காமல், விரிந்த வாணிக வாழ்க்கைக்கு ஒரு சிறிதும் பயன்படாத இந்தியைப் பொது மொழியாக்க முயல்வோர் நம்மனோர்க்கு உண்மையில் உதவி செய்பவர் ஆவரோ? கூர்ந்து பார்மின்!

இவ்வியல்பினை உற்று நோக்குங்கால், ஆங்கிலத்தின் முன் வேறெந்த மொழியுந் தலைதூக்கி நில்லாதென்பது தோற்றமேயாம்.

எல்லா மொழிகளிலும் உள்ள எல்லாச் சிறந்த நூல்களையும் தன்கண் மொழி பெயர்த்து வைத்து அவற்றின் பொருளை அவை வேண்டுவார்க்கு எளிதின் ஊட்டுந் தனிப் பெருஞ் சிறப்பு வாய்ந்த ஆங்கில மொழியை, நம்மனோர்க்குப் பொது மொழியாக்காமல், இந் நலங்களில் ஒரு கடுகளவு இல்லா இந்தி மொழியைப் பொது மொழியாக்க முயலல் அறிவுடையார் செயலாகுமா? ஆகாதே! ஆதலால், நந்தமிழ் நாட்டவர் ஆங்கிலத்தையுந் தமிழையுமே நன்கு பயின்று நலம் பெறுவாராக!

★
இயற்கையை வெல்லும் மனித சக்தியின்
அற்புத சாதனையைப் பற்றிய
முழு விளக்கக் கட்டுரை!
"முத்தாரம்" அக்டோபர் இதழில்!
நீங்கள் வாங்கிவிட்டீர்களா?

மங்கை ஒருத்தரும் சுகமும் எங்கள் மாத்தமிழ்க்கு ஈடாமோ?

சோமநாதபுரத்துச் சிலை..

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

தூரத்தில் சென்று மறைந்தது. புவனாவின் உடல் பயத்தால் ஜில்லிட்டது. வியர்வையால் ஆடைகள் நனைந்து உடலோடு ஒட்டிக் கொண்டன. செய்வதறியாமல் செயலற்று நின்றாள்.

"புவனேஸ்வரி, புவனேஸ்வரி!" — ஆணையும் அன்பும் கலந்து அழைத்தது எங்கிருந்தோ ஒரு குரல்!

எங்கிருந்து வருகிறது இந்தக் குரல்? யாருக்குச் சொந்தமானது அது? அழைப்புக்கு என்ன பதில் சொல்லுவது? கள்ளமற்ற அவளுக்கு ஏற்பட்டிருக்கும் இந்தப் புதிய எதிர்பாராத சூழ்நிலையில் என்ன செய்வது; எப்படி நடந்து கொள்ளுவது என்று தெரியாமல் விழித்தாள்.

"ஆண்டவனின் ஆலிங்கனத்தில் ஈடுபட ஏன் புவனா இன்னும் தயக்கம்?"—குரல் மீண்டும் பேசியது.

எங்கோ கேட்ட குரல்; அவளுக்குப் பழக்கமானதும்கூட! கணப் பொழுதில் அவளுடைய உள்ளத்தில் ஓர் எண்ணம் பளிச்சிட்டது. ஆம்; அது அந்தக் கிழப் புரோகிதனின் குரல்தான்! அந்தக் குரலில் இப்பொழுது தெய்வீக ஒலி கேட்கவில்லை; காம உணர்ச்சியின் காட்டுக் கூச்சல் கேட்டது!

தான் காணப்போவது சோமநாதரின் திவ்ய தரிசனமல்ல! பயங்கரமான பல உண்மைகள் அவளுடைய மனதில் மின் வெட்டி மறைந்தன. வஞ்சகமே உருவாகி, அபினியின் போதையில் நிலை தடுமாறும் புரோகிதனின் விகாரத் தோற்றம் அவள் மனத் திரையில் தோன்றி பேய்ச் சிரிப்பு சிரித்தது. தப்பித்து ஓடுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற எண்ணத்துடன், வாயிலை நோக்கி இருட்டிலே ஓடத் தொடங்கினாள்.

"ஆண்டவனின் அழைப்பை அலட்சியப்படுத்தி ஓடாதே. நில்." என்று கூறிக் கொண்டே ஓர் உருவம் அவளைப் பின் தொடர்ந்தது.

அவள் திரும்பிப் பார்க்காமலேயே பலம் கொண்டமட்டும் விரைந்து ஓடினாள்.

பிரகாரத்தைத்தாண்டி மதிற் சுவர்களுக்கு மத்தியிலே உள்ள நடைபாதையின் வழியாகத் தொடர்ந்து ஓடினாள். பின்னே ஓடிவந்த உருவம் அவளை நெருங்கி அவள் கைகளை கெட்டியாகப் பிடித்துக் கொண்டது. திரும்பிப் பார்த்தாள்.

தலைமைப் புரோகிதன்-காமச் சேற்றில் புரளுவதையே ஈஸ்வர கைங்கரியமாகக் கொண்ட மகிஷம்—பல்லிளித்து நின்று கொண்டிருந்தது!

"புவனா, பருவக்கொடியே! நோய்வாய்ப்பட்டிருக்கும் உன் புருஷன் இன்று அல்லது நாளை எமப்பட்டணம் போய் விடுவான்! விதவைகள் ஒன்று உடன்கட்டை ஏற வேண்டும்; அல்லது வேதியருக்குப் பணிவிடை செய்யும் பகவத் கைக்கரியத்தில் தங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்......நீயோ இளம் பெண்; புருஷ சுகத்தைப் பரிபூரணமாக அனுபவித்தறியாதவள்...இந்தப் பொன்னவிர் மேனியைப் பொல்லாத நெருப்புக்கு இரையாக்க யார்தான் சம்மதிப்பார்கள்? காய்ந்த சருகுகளை ஹோமத்தீயில் கொட்டலாம்! இன்றுதான் புஷ்பித்த பாரிஜாதத்தை, ஆரத்தில் சேர்த்து பகவானுக்குச் சாத்தி மகிழ்வதுதானே எங்களுடைய கடமை...,"—அபின் போதையில் வார்த்தைகள் புரோகிதனின் வாயிலிருந்து பெருக்கெடுத்தன.

"கிழப் பேயே, அடுக்குமா இந்த அநீதி? உன் பக்தி வேஷத்தில் ஏமாந்து எத்தனை அபலைகள் என்போல் தவிக்கிறார்களோ!...விடு என் கையை...," என்று கூறிக்கொண்டே அவள் திமிறினாள். அவன் பிடியோ இரும்புப் பிடியாக இருந்தது. இரையை வளைத்து நொறுக்கும் மலைப்பாம்புபோல் அவனுடைய முதிய—ஆனால் உறுதியான கரங்கள் அவளை உடலோடு சேர்த்து அணைத்தன; அவள் புழுபோல் நெளிந்தாள். தூய்மையின் இருப்பிடம், ஒழுக்கத்தின் பிறப்பிடம், தொல்லைகளின் முடிவிடம் என்றெல்லாம் வேத சிரோன்மணிகளால் வர்ணிக்கப்படும் ஆலயம் — வேதியர்களின் காமக்களியாட்ட அரங்கமாக, அபலைகளின் கற்பு சூறையாடப்படும் பலிபீடமாக, இந்து மதம் அதன் பெருமைபற்றிச் சிந்துபாட, சனாதனிகள் அதன் பாதுகாப்பிற்குச் சல்லடம் கட்ட, வரலாற்றில் நூதனமானதொரு பொற்காலத்தை சிருஷ்டித்துக் கொண்டிருந்தது. அல்லற்பட்டு ஆற்றாது அழுதோருக்கு அபயமளித்து ரட்சிப்பதாகப் பெருமை பேசப்பட்ட சோமநாதர், தன் முன்னிலையில்-தன்னுடைய புனித புரியில்—மனச் சான்றுக்குச் சிறிதுகூட மதிப்புத்தராமல்—புரோகிதர்கள் நடத்திய பயங்கரமான, சமூகக் கேடான அநீதிகளைப் பொறுத்துக் கொண்டு, நம்பியோரை நட்டாற்றில் விட்டு விட்டு, மௌனமாகக் கல்லுக்குள்ளேயே சிறைபட்டு செயலற்றுக் கிடந்தார்!

புவனா துவண்டாள்; துடித்தாள்! புரோகிதனோ விடுவதாக இல்லை!

"சோமேசா, சோமேசா!"—அவள் அபயக் குரல் எழுப்பினாள்.

திடீரென்று பலமான ஒரு குத்து; சுமார் பத்தடிக்கு அப்பால் உருண்டு போய்க் கீழே விழுந்தான் புரோகிதன். அவன் தெளிவடைந்து எழுவதற்குள் புவனாவின் கரங்களை இறுகப் பற்றி இழுத்துக் கொண்டு புதிய உருவமொன்று வெளியேறியது.

யார் இந்தப் புதிய மனிதன்? காப்பாற்றவந்தவனா? அல்லது, கற்பைச் சூறையாட வந்திருக்கும் புதிய காமுகனா? சந்தேகம் தோன்ற புதிய ஆளை ஏறிட்டுப் பார்த்தாள் புவனா. ஆம்; முற்றிலும் புதிய முகம்; யாரோ தெரியவில்லையே; என்ன நடக்குமோ என்று பயந்தாள் அவள்.

அவளுடைய உணர்ச்சிகளை முன்கூட்டியே நன்றாக அறிந்தவன்போல் "பயப்படாதீர்கள் அம்மணி! கள்ளனுமல்ல; காமுகனுமல்ல; நான் வஞ்சகர் விரித்த வலையில் சிக்கி, மீளுவதற்கு வகை தெரியாமல் தவிக்கும் உங்களைப் போன்றோருக்கு உதவிடவே ஈஸ்வரனால் படைக்கப்பட்டவன்!" என்றான்.

உள்ளத்தின் அடித்தளத்தில் சுரந்து வரும் உண்மையான அன்புரையா; அன்றி, ஏமாற்றும் எண்ணத்தில் கூறப்படும் பசப்புச் சொற்களா என்று புரியாமல் புவனா தடுமாறினாள்.

"என்னை விட்டு விடுங்களய்யா...இனி நானாகவே ஒருவர் துணையுமின்றி வீடுபோய் விடுவேன்...என கணவர் வேறு மரணப் படுக்கையில் இருக்கிறாரய்யா. நான் உடனே போக வேண்டும்!"—புவனா கெஞ்சினாள்.

"நேரே உங்கள் வீட்டுக்குச் செல்லுவதை நான் ஒன்றும் தடுக்கவில்லையே அம்மணி! வழியில் அந்தக் கிழட்டுப்-புரோகிதனால் அபாயம் வராமல் தடுக்க நான் உங்களோடு வீடுவரை துணைக்கு வருகிறேன்... அவ்வளவுதான்..."

தன் கற்பைக் காப்பாற்றியவனின் உதவியை மறுக்க புவனாவிற்குத் துணிவில்லை; தவிர அவன் வழித் துணைக்கு வருவதும் நல்லதென்றே எண்ணினாள். இருவரும் சாலையின் வழியாக மௌனமாக நடந்தார்கள். புவனா ஓரக்கண்ணால் அவனைப் பார்த்தாள். காவி உடை, ஓரிரு நரை மயிர், இடையே தென்படும் கரிய தாடி, ஆனால் இடுப்பிலே பெரிய கத்தி — ஆகியவற்றோடு வதனத்தில் அருள் வழிய, கண்களில் கம்பீரம் ஒளிவீச, உலகத்தையே லட்சியம் செய்யாமல் அவன் அவளோடு நடந்து சென்று கொண்டிருந்தான்.

அக்டோபர்-13 இந்தி எதிர்ப்பு நாள்

★

நாடெங்கும் கொண்டாடுக!

இந்தியப் பேரரசு தென்னகத்தின்மீது இந்தியைத் திணிக்கும் அநீதியை எதிர்த்து, 1957, அக்டோபர்-13, ஞாயிற்றுக்கிழமையை 'இந்தி எதிர்ப்பு நாளா'கக் கொண்டாடுமாறு தி. மு. கழகக் கிளைகளையும், துணை அமைப்புகளையும், தென்னாட்டின் நலனிலும்-திராவிட மொழிகளின் நலனிலும் அக்கறை கொண்ட பிற அமைப்புகளையும் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

அன்று இந்தி எதிர்ப்பு ஊர்வலங்கள்—பொதுக் கூட்டங்கள் ஆகியவற்றை மிகச் சிறப்பாக நடத்துவதோடு, இந்தியை எதிர்க்கும் தீர்மானத்தை நிறைவேற்றி, அதன் ஒரு படியை இந்தியப் பேரரசின் உள் நாட்டமைச்சருக்கும், மற்றொரு படியை மாநில அரசியலாருக்கும், வேறொரு படியைத் தலைமைக் கழகத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

அமைதிக்குக் கேடு விளையாத வகையில் கண்ணியத்தோடும, கட்டுப்பாட்டோடும் கடமையாற்ற வேண்டுகிறோம்.

—இரா. நெடுஞ்செழியன்

பொதுச் செயலாளர் [தி. மு. க.]

பூசாரி போன்றவரின் பொல்லாங்குப் பேச்சு!

"இன்றைய தினம் எங்கள் பேரிலே சாட்டப்படுகின்ற குற்றம் என்ன? 'இவர்கள் எதற்கெடுத்தாலும் வடக்கு-தெற்கு என்று பேசுகின்றார்கள்' என்பதுதான்!...

இடுப்பிலேயிருந்து கணுக்கால் வரையிலே கூந்தல் வளரும தைலம்' என்றால், கூந்தல் வளர்ந்ததென்றா பொருள்? அந்த பாட்டில் விற்பனையாக வில்லை! அதைப்போல் தன்னுடைய தோழர்களைச் சந்திக்கிற பொழுது 'அண்ணாதுரை கூட்டத்தார் பலமான எதிர்க் கட்சி' என்றா அமைச்சர் சொல்லுவார்? 'அது ஒன்றும் பிரயோசனம் இல்லை' என்றுதான் சொல்ல வேண்டும்!

சொல்லுகிறவர் யார்? சொன்ன இடம் எது? எந்த நேரத்திலே சொன்னார்? சொல்லுவதற்கு அவருக்கு 'இருக்கின்ற உரிமை என்ன? தகுதி என்ன?—இதைப் பார்த்து நீங்கள் அதை ஆராய வேண்டுமே தவிர, 'சொன்னாரே; இருக்குமோ?'—என்று எண்ணுவதல்ல! 'இருக்குமோ' என்றால், என்ன பொருள்? பூசாரி நம்முடைய வீட்டுக்கு வந்தால்—வீட்டிலே நம்முடைய தாய்க்கு ஏதாவது காய்ச்சல் என்றால் அதை டைபாய்ட் சுரம் என்றா அவன் சொல்லுவான்? 'பேய் பிடித்திருக்கும் போல் இருக்கிறதே' என்றுதான் சொல்லுவான்; அப்போதுதான் தம்மிடத்திலே வருவார்கள் என்பது அவனுக்குத் தெரியும்—தொழிலும் கிடைக்கும். அதைப்போல, நிதியமைச்சர் சுப்பிரமணியமும், தொழில் தன்மையிலேதான் பேசினார்."

—அறிஞர் அண்ணா

● கொந்தளிக்கும் தமிழ்க் குலத்தின் மாபெரும் எதிர்ப்புக்கிடையே-தமிழைக் கொல்ல நினைத்து மெல்ல நுழைகிறது இந்தி!

● ஆனால் அந்த மந்திகாச முகவதியாள்—இந்திப் பெண்ணாள்—வந்து வந்து சென்ற பாதை-தமிழர்தம் மானம் காத்த கதை சொல்லும்!

● 1938-ல் ஆச்சாரியார் அழைத்து வந்த இந்திக்குத் தமிழினம் காட்டிய எதிர்ப்பும்—வீறு கொண்டெழுந்த தமிழறிஞர்கள் கிளப்பிய வீர முழக்கமும்—களம் நோக்கிச் சென்று கொண்டிருக்கும் நமக்குப் படைக் கலன்களாகத் தோன்றுகின்றன! அந்த இலட்சிய வரிகளில் சில கீழே தரப்பட்டிருக்கின்றன:

திரும்பிப் பார்; தீவிரம் கொள்!

● "நான் இந்தியைக் கற்றறிந்தேனில்லை. எனினும் எனக்குத் தெரிந்தவரை, 13-வது நூற்றாண்டின் துவக்கத்தில்தான் இந்தி மொழியின் ஆதி கவி எனப்படும் "சணட் பார்டி". என்பவர் இருந்தார் என அறிகிறேன். அவர் "பிரிதிவிராஜ ராஸ்யூ" என்ற நூலை எழுதினார். அந்த மொழியிலே அதற்கு முன்னால் வேறெந்த கலையும் இருந்ததாக நாம் அறியோம். ஆனால் தமிழ் இந்தியாவின் ஆதிகால மொழி. தமிழ் இலக்கணமாம் "தொல்காப்பியம்" இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே இயற்றப்பட்டது. தமிழெங்கே; இந்தி எங்கே? இரண்டிற்குமா ஒப்பிட்டுப் பார்ப்பது?

"தொல்காப்பியம் என்பது ஓர் இலக்கண நூல். ஒரு மொழி நல்ல திட்டமான வளர்ச்சி அடைந்த பிறகுதான் அதற்கு இலக்கண நூல் தேவையாக இருக்கும். ஆகவே இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னாலேயே தமிழ் மொழி மிகச் சிறந்த வளர்ச்சியைப் பெற்றிருந்தது என்பது தெளிவு. தமிழ் மொழி பண்டைக் கால மொழி என்பதோடு கவர்ச்சியும் வனப்பும் நிரம்பிய மொழி. தொல்காப்பியத்தின் ஒரு சில அடிகளை நெருங்கவும் இந்தியினால் முடியாது.

"இத்தகைய ஆதிமொழி என இந்தியைக் கூற முடியுமா? குறள் போன்ற எந்த அரிய நூலேனும் இந்தியில் காட்ட முடியுமா? ஒழியட்டும்; இந்தி மிக நன்றாக வளர்ச்சி அடைந்த மொழி என்றுகூட வைத்துக் கொள்வோம். அதற்காக இந்தியை நம நாட்டில் கட்டாயப்படுத்திப் புகுத்த வேண்டுமா-என்ன?"

"கனடாவைப் பார்ப்போம். அங்கு சமஷ்டி அரசியல் இருக்கிறது. அங்கு இப்போதும் பிரஞ்சு, ஆங்கிலம் இரு மொழிகளும் பேசப்பட்டு வருகின்றன. அந்நாட்டு சட்ட மன்றத்தில்கூட, பிரஞ்சு, ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளும் கையாளப்படுகின்றன.

"தென் ஆப்பிரிக்காவை எடுத்துக் கொள்வோம். அங்கு இரு சாதியினர் இருக்கின்றனர்; இரு மொழிகளும் இருக்கின்றன. ஆங்கிலேயருக்கு ஆங்கிலமும், போயர் எனப்படும் டச்சுக்காரருக்கு டச்சு மொழியும் இன்றும் இருந்து வருகின்றன. இரு மொழிகளும் அரசியல் மொழிகளாக இருக்க வேண்டுமென்றும், இரண்டிற்கும் சம உரிமை, சம அந்தஸ்து, சம சந்தர்ப்பம் வழங்க வேண்டுமென்றும், சட்டசபை நிகழ்ச்சிகள், குறிப்புகள் யாவும் இரண்டு மொழிகளிலும் எழுதப்பட வேண்டுமென்றும் 1909 ஆண்டு தென் ஆப்பிரிக்கச் சட்டம் கூறுகிறது.

"சுவிட்சர்லாந்து தேசத்தில் மூன்று வகை சாதியினர் உளளனர். மூன்று வகை மொழிகளும் பேசப்படுகின்றன. ஆனால் நாடு ஒன்றுதான். நாட்டு ஒற்றுமையும் உள்ளது. 1874-ல் நிறைவேற்றப்பட்ட சமஷ்டி சட்டத்தின்படி, ஜெர்மன், இத்தாலி, பிரஞ்சு ஆகிய மூன்று மொழிகளும் தேசிய மொழிகளாக ஏற்படுத்தப்பட்டன. அங்கு 100-க்கு 71 பேர் ஜெர்மன் மொழியும், 23 பேர் பிரஞ்சு மொழியும், 5 அல்லது 6 பேரே இத்தாலிய மொழியும் பேசுபவர்கள் என்றபோதிலும்கூட மூன்று மொழிகளும் தேசிய மொழிகளாக ஏற்படுத்தப்பட்டன.

"1919-ல் நிகழ்ந்த புரட்சிக்குப் பிற்பாடு அமைக்கப்பட்ட ஜெர்மானிய அரசியல் அமைப்புத் திட்டத்திலும் ஜெர்மன் கூட்டாட்சியைச் சேர்ந்த பல திறப்பட்டவரின் மொழி உரிமையில் சட்டப்படியோ, நடைமுறை வழியாகவோ, அரசியலார் கை வைக்கக் கூடாதென்று திட்டமாக வரையறுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

"இவைகளை எல்லாம் கவனிக்கும்போது, இந்தியாவிற்கு ஒரு பொது மொழி தேவையே இல்லை என்பது நன்கு விளங்கும். பல நூற்றுக் கணக்கான மொழிகள் பரவி உள்ள மாகாணங்களிலும் தனி அரசுகளிலும் (சமஸ்தானங்கள்) ஒரு புது மொழியைத் திணித்துப் பொது மொழி யாக்குவது என்பது நடக்கக்கூடிய செயல் அன்று. நிலையான ஓர் எல்லா இந்தியப் பொது மொழி, கனவுலகில்தான் இருக்க முடியும்...

—சர். கே. வி. ரெட்டி

[1938—ல் காஞ்சி இந்தி எதிர்ப்பு மகாநாட்டில் தலைமையுரை]

○

● "இந்தியால் தமிழ் கெடாது எனப் பறை யடிப்போர் இந்தியிடம் என்ன சிறப்பிருப்பதாகக் கருதுகின்றார்கள்? தமிழ் கெடாது எனச் சொல்லுபவரே ஆங்கிலத்தால் தமிழ் இழந்த நிலையையும் அடைந்த கேட்டையும் ஒப்புக் கொள்வர். தமிழ் ஆரியத்தால் கெட்டு மலையாளமானதுபோல இந்தியால் நொந்து வடநாட்டுப் பெரியம்மை வார்த்து உருமாறும்; இலக்கணக் கட்டழிந்து தட்

[தொடர்ச்சி பக்கம்-12]

★ எல்லை மாற்றம்! ★



ஆந்திரமும் தமிழகமும் நியாயமான அடிப்படையின்றி எல்லைப் பிரதேசங்களை மாற்றிக்கொண்ட விதத்தை இப்படிச் சித்தரிக்கிறது டெல்லி 'சங்கர்ஸ் வீக்லி'!

'நாச'ராவீர்; நல்லது செய்வீர்!

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

இந்த இடத்தில் அவர் 'கம்யூனிசப் பூச்சாண்டி'யை மிகவும் பயங்கரமாக 'சிருட்டித்திருக்கிறார்! அப்போதாவது அதைக் கண்டு அமெரிக்கா பயப்படுகிறதா—என்று பரிட்சித்திருக்கிறார்!

புராணத்திலே குசேலர் கிருஷ்ண பரமாத்மாவைக் காணச் சென்றார்!

ஏன்?

"என்னுடைய இருபத்தேழு குழந்தைகளும் குடல் வற்றிச் சாகும் நிலையில் வாழ்க்கைப் போராட்டத்தின் கடைசி கட்டத்தில் போராடிக் கொண்டிருக்கின்றன. என்னுடைய இல்லாள் சோகத்தின் உச்ச கட்டத்தில் ஒப்பாரி வைத்துக்கொண்டிருக்கிறாள். நான் தினந்தினம் பிச்சை எடுத்துவரும் புல்லரிசியோ அடிவயிற்றில் அணுவளவையாவது நிரப்புவதாக இல்லை. ஏ, பரந்தாமனே! என்னுடைய பழைய நண்பனே! நீ கருணை வைத்து; கடைக் கண் பார்த்து; எனக்கு அருள் பாலிப்பாயாக!"—என்று கோரிக்கை விடுப்பதற்காகத்தான்!

குசேலர் நிலையிலேதான் ஏழை இந்தியாவுக்கும்; அதன் கோடானுகோடிக் குழந்தைகளைக் காப்பாற்றுவதற்கும் உதவி பெறுவதற்காக துவாரகை என்னும் அமெரிக்காவுக்குச் சென்றிருக்கிறார் கிருஷ்ணமாச்சாரியார்!

ஆனால் இந்தக் குசேலரோ, துவாரகையிலே சென்று வறுமையைப் பற்றி வாய் திறந்து பேசக் காணோம்; கோடிக் கணக்கான குழந்தைகளின் குமுறலைப் பற்றி ஒரு வார்த்தையும் கூறவில்லை.

"ஈரேழு பதினான்கு லோகங்களையும் ரட்சிக்கும் பரந்தாமனே! உன்னுடைய பாலபருவத்தில் நீ கழுத்தை நெறித்துக் கொன்று விட்டதாக நினைத்துக் கொண்டு இருக்கிறாயே; அந்தக் கம்சனாகப் பட்டவன் சாகவில்லை. இன்னும் உயிரோடு இருக்கிறான்; அவன் எதிர்ப்பிலிருந்து நான் உண்மையிலேயே தப்ப வேண்டுமானால் நீ எனக்கு உதவி செய்வாயாக!

"இந்த ஏழைக் குசேலனுக்காக நீ கருணை காட்ட வேண்டாம். என் மூலம் உன் எதிரியாகப்பட்டவனுடைய ஆதிக்கம் குறையும்; அவனுக்கு அழிவு கிட்டும்-என்பதற்காகவாவது நீ உதவி செய்!

"நீ உதவி செய்யா விட்டாலும் நான் தப்பித்துக்கொள்வேன். ஆனால் உன்னுடைய பரம்பரை எதிரி உன் பார்வைக்கு எதிராகவே வளர்ந்து கொண்டேயிருப்பான். அவனை ஒழிக்க வேண்டுமானால் நான் வாழ வேண்டும். அதற்காகவாவது நீ எனக்கு உதவி செய்வாயாக!"

—இந்த நவீன குசேலர் நிலைமையைத் திருத்திக் கூறி, இப்படிப் பேசியிருக்கிறார்! கம்சனைவிடக் கொடியவனாக சோவியத் நாட்டையும், மக்கள் சீனத்தையும் அமெரிக்கர்களது மனத்திரையிலே தீட்டியிருக்கிறார்!

அவருடைய வழக்குமூலத்தின்படி சோவியத்தும் சீனமும் இந்தியாமீது ஆக்ரமிப்பு நோக்கம் கொண்ட நாடுகள்! புதுடில்லியிலிருந்து தோழர் டாங்கே குரல் கொடுத்தால் பீரங்கிகளுடனும் டாங்கிகளுடனும் இந்தியாவுக்குள் படையெடுத்து வரும் பான்மை கொண்டிருக்கிற தேசங்கள்!

நிலைமை அவ்வாறானால் என்றாவது ஒரு நாள் ஆக்ரமிப்பு நடத்தப்போகிற நாட்டுடன் இன்னொரு நாடு எந்தவிதத் தொடர்பினைக் கொண்டிருக்க வேண்டும்?

அந்த விதத் தொடர்பினைத்தான் இப்போது இந்திய உபகண்டம் சோவியத் யூனியனிடமும்; செஞ்சீனத்திடமும் கொண்டிருக்கிறதா?

இல்லையே!

இங்கிருக்கிற டாங்கேயுக்குத் துணையாக பீரங்கிகளை அனுப்பி வைக்கப்போகிற ரஷ்யாவுடன் பண்டித நேரு ஏன் கொஞ்சிக் குலாவ வேண்டும்?

கட்டித் தழுவுகிற நேரத்திலேயே சிவாஜியைப்போல் கையிலே புலி நகத்தை மறைத்து வைத்திருக்கிற ரஷ்யாவோடு நட்புறவு கொண்டாடி; அவர்கள் உதவியோடு; அவர்கள் மூலதனத்தில்; அவர்கள் மேற்பார்வையில் ஏன் இந்தியாவிலேயே இரும்பாலையொன்றை நிறுவ வேண்டும்?

அப்படி ஆக்ரமிப்பு நடத்துவதும்; இந்தியக் கம்யூனிஸ்ட்டுகள் நடத்தப்போகிற புரட்சிக்கு உறுதுணை தருவதுமே அவர்களது இலட்சியமாக இருந்தால் ஏன் அவர்கள் அனுப்பி வைத்திருக்கிற 'ரூபிள்' நாணயங்களுக்குப் பின்னால் துப்பாக்கித் தோட்டாக்கள் மறைந்து கொண்டிருக்கக் கூடாது?

—இதே போலத்தான் சீனாவைப் பொறுத்த விஷயமும்!

சமாதானம் விழையும் சீனாவின் நல்லெண்ணத்தை நம்பி இந்திய உபகண்டத்தின் ஒரு எல்லையே இருக்கிறது!

அந்தச் சீனாவுக்கு ஆக்ரமிப்புக் கருத்து இருக்கிறது என்பது உண்மையானால்; அது டாங்கேயின் கைப்பிள்ளையைப் போல் குண்டுகளைப் பொழிய முடியுமேயானால்; அவ்வளவு அநாகரிகப் பண்பு கொண்ட சீனத்திற்கு ஐக்கிய நாடுகள் சபையிலே இடம் வாங்கித் தருவதற்காக தொடர்ந்து எட்டு முறைகள் ஏன் முயற்சி செய்ய வேண்டும்?

—டி. டி. கே. கூறியதை முற்றிலும் உண்மையென்று கருதினால் இதுவரை பண்டிதர் உபதேசித்து வந்த பஞ்சசீலம் பாழடைந்த சிலமாகிறது!

எந்த மக்கள் சீனத்தை தன்னுடைய தோழன்; சமாதானப் பிரியன் என்று கூறிக் கொண்டிருக்கிறாரோ, அவை அத்தனையும் வேஷக்காரனின் மோசப் பேச்சுக்களாகத்தான் முடிகின்றன!

இந்தியாவின்மீது ஆக்ரமிப்பு நடத்துவதற்கோ; அல்லது வெளிப்படையாகவோ, ரகசியமாகவோ இந்தியக் கம்யூனிஸ்ட்டுகளுக்கு ஆயுத உதவி செய்வதற்கோ எந்த விதமான முகாந்திரமும் இல்லாத இந்த நேரத்தில் இது போன்ற குற்றச்சாட்டுகளை சோவியத் யூனியன் மீது சுமத்துவது என்பது பண்டிதரின் வெளிநாட்டுக் கொள்கையை, டி. டி. கே. நிர்வாணக் கோலத்தில் அகில உலக மக்கள் எண்ணத்திற்கு நேராக நிறுத்தி வைக்கிறார் — என்று நாம் பொருள் கொள்ள வேண்டியிருக்கிறது!

பண்டிதர் வாயினால் சோவியத் சீன நாடுகளுடன் நட்புறவு!

கிருஷ்ணமாச்சாரியார் வாயினால் சோவியத்—சீன நாடுகளுடன் விரோதம்!

—இது அதிக நாள் நாணயமுள்ள நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையாக இருக்க முடியாது!

ஆமாம்; தெரிந்தோ தெரியாமலோ கிருஷ்ணமாச்சாரியார் பண்டிதருடைய வெளிநாட்டுக் கொள்கையின் உண்மையான நோக்கத்தைப் படம் பிடித்துக் காட்டி விட்டார்!

பண்டிதர் சோவியத், சீன நாடுகளின் நண்பரல்ல; அமெரிக்காவின் செல்லப்பிள்ளையாக இருப்பதற்குத்தான் அவர் விரும்புகிறார்—என்பதை டி. டி. கே. பாடியிருக்கிற 'குசேலோபாக்யானம்' உலகத்திற்கு அறிவித்து விட்டது!

உண்மையில் பண்டிதர் இந்திய உபகண்டத்தின் முன்னேற்றத்திற்குப் பொருள்தேட விரும்பினால், அமெரிக்காவிடம் தன் மானம் துறந்து 'பிச்சை' கேட்பதைவிட துணிவான வழிகள் பல இருக்கின்றன!

பல மாதங்களுக்கு முன்னால் எகிப்திலும் இது போன்றதொரு நிலைமைதான் ஏற்பட்டது!

அஸ்வான் அணைக்கட்டு கட்டி முடிக்கப்படாவிட்டால் எகிப்து நாடு பொருளாதாரத் துறையில் வெகுவாக முன்னேற முடியாது என்கிற சூழ்நிலை அங்கு!

அந்த நேரம் நாசர் என்ன செய்தார்?

அமெரிக்கா உதவி மறுத்த பிறகும் அதன் காலடியில் வீழ்ந்து பிச்சை கேட்டாரா?

இல்லை!

எந்த நேரமும் தனக்கே நாசம் நேரலாம் என்பதைத் தெரிந்திருந்தும் நாசர் சூயஸ் கால்வாயை அரசாங்கத்தின் பொதுச் சொத்தாக மாற்றினார்!

சூயஸ், மக்கள் சொத்தாயிற்று; எகிப்து மக்கள் வாழ்க்கையிலும் புது ஒளி பிறந்தது!

பண்டிதர் உண்மையிலேயே இந்திய உபகண்டத்தின் தன்மானத்தையும், நடு நிலைமையையும் காப்பாற்ற விரும்பினால் அவரும் இப்படி ஒரு 'நாச'ராக மாறினால்தான் முடியும்!

ஆனால் அவரால் அப்படி மாற முடியாது!

ஏன்?

நாசராக மாறுவதற்கு வெறும் 'நாக்கு' மட்டுமிருந்தால் போதாது.

ஆனால் பண்டிதரிடம் இருக்கும் மூலதனமோ 'நாக்கு' மட்டும்தான்; செயல் திறம் அல்ல!

-மாறன், எம். ஏ.

பிறைவானம் ...

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

தாள் நாட்டு வைத்தியரின் மனைவி!

அவர்களது வாய்கள் திறந்தன; வகை வகையாய்ப்பேசின! ஆனால் செவிகள் மூடிக் கொண்டன; அந்தச் சூதறியாத சிறுவனின் சோகக் கதறலைக் கேட்க மறுத்தன!

என்ன செய்வது? அழுதழுது சிவந்துபோன அவனது விழிகளுக்கோ — அல்லது விம்மி விம்மி வெந்துபோன அவனது நெஞ்சத்திற்கோ எந்த வழியும் புலப்படவில்லை. யோசித்தான்; நேசித்தவர்கள் — பாசத்தோடு பழகியவர்கள்—வீசுகின்ற கணைகளிலிருந்து தப்பிட வழி என்ன என்று யோசித்தான்!

ஆசையோடு பழகியவர்களின் நேசக் கரங்கள் இன்று படமெடுத்தாடுகின்ற நாகங்களாகி விட்டன! "ஓடு, துரோகியே ஓடு! நன்றி மறந்த நயவஞ்சகனே, ஓடிப்போ!" என்று விரட்டுகின்றன!

○

குப்புசாமி ஓடிவிட்டான்!

ஊருக்குழைத்த உத்தமத் தம்பி, அந்தக் கிராமத்தை மறந்து—பண்போடு பழகிய நூற்றுக் கணக்கான உள்ளங்களை மறந்து ஓடியே விட்டான்!

அதன் பிறகு அவனை யாரும் தேடவில்லை—ஆனால் ஒரு நாள் திடீரென்று பண்ணையார் முத்துத் தேவர் மட்டும் தேடினார்! பங்களா தோட்டத்திலே வாழை மரங்களுக்கிடையே புதைந்து கிடந்த வைரக் கொலுசு திடீரென்று அவர் கைகளிலே கிடைத்து விட்டபோது தேடாமல் என்ன செய்வார்?

ஆனால் குப்புசாமி கிடைக்கவேயில்லை!

அதோடு மட்டுமல்ல; பண்ணையாருக்குக் கொலுசு கிடைத்த ரகசியமும் பங்களாவுக்குள்ளேயே புதைந்துபோய் விட்டது!

—சொர்ணம்

'சினிமா டைம்ஸ்'
முன்னாள் ஆசிரியர் பி. எஸ். இளங்கோ அளிக்கும்
"அமிர்தம்"
(சினிமா மாதம் இருமுறை)
மு. கருணாநிதி, முரசொலி மாறன், வி. என். சம்மந்தம், இராதாமணாளன், மற்றும் பல கலையுலகப் பிரமுகர்களின் சிறப்புக் கட்டுரையுடன்
20—10—57 முதல் வெளிவருகிறது.
தனிப் பிரதி விலை அணா 2
[முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் விண்ணப்பிக்கவும்]
"அமிர்தம்"
172, முஸ்தோரா பேகம் பேட்டை, சென்னை-14.

குப்புசாமிக்கு அந்த கிராமத்திலேயே நல்ல கிராக்கி; நல்ல பெயருங்கூட! அப்படியென்றால் அவன் என்னவோ சீமான் வீட்டுச் செல்வக் குமரன் என்று நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை!

இல்லாவிட்டால் அவனது அப்பாவாவது ஊருக்குப் பெரியவரா? யாருக்கும் தெரிந்தவரா? அப்படியும் இல்லை! ஏனெனில் அவனுக்கு அப்பாவே இல்லை; அது மட்டுமல்ல; அம்மாவும் இல்லை! பாவம்; விவரம் தெரிந்த நாள் முதல் அவன் அனாதை! சுற்றத்தார் யாருமற்ற தனித் தம்பி; ஆனால் தங்கக் கம்பி!

அந்த கிராமத்திற்கு அவன் ஒரு மணிக் கூண்டு போல! கண்ணற்றவர்கள் தவிர மற்ற எல்லோருக்கும் மணிக் கூண்டு தேவைதானே! அது போலத்தான் குப்புசாமி என்ற அந்த மனித மணிக் கூண்டும்! ஆனால் அவனை விழியற்றவர்களுக்கும் வேண்டியவன்; ஆண்டிகளுக்கும் தேவைப்படுபவன்!

"இந்தாடா குப்புசாமி! எங்கே போறே? அப்படியே மளிகைக் கடை மன்னார்சாமிக் கிட்டேபோய் ஒரு மணங்கு மிளகாய் வாங்கிக்கிட்டு வந்துடேன்!"

"சரி, சார்! இதோ பத்து நிமிஷத்திலே வாங்கியாந்து கொடுத்துட்டுப் போறேன்!"

"ஆமாம்; எப்படி எடுத்துக்கிட்டு வருவே? ஒரு கை வண்டி புடிச்சி...?"

"கை வண்டியா? அது ஏன்? இந்தக் கை எதுக்கு இருக்குதாம்? நீங்க ஒண்ணு; கண நேரத்திலே கொண்டாந்து தள்ளிடறேன்; உங்க வேலையைப் பார்த்துக்கிட்டுப் போங்க!"

O

"எங்கேப்பா குப்புசாமி இந்த வேகாத வெயிலிலே...?"

"கணக்கப்பிள்ளை வீடு வரைக்கும் போறேம்மா! அவர் கொல்லையைக் கொத்தி கீரைப் பாத்திப் போடணும்னாரு..."

"அப்படியே சாயந்தரம் கடைத்தெருப் பக்கமாக வந்து ஒரு படி மல்லிகை அரும்பு வாங்கியா... இந்தா சில்லரை!"

"சரியம்மா......அஞ்சு மணிக்கெல்லாம் 'ரெடி'யா வந்துடும்... வரட்டுமா?"

O

"சேதி தெரியுமா குப்புசாமி? நம்ம கோடி வீட்டுக் குமரப்பன் மகன் பள்ளிக்கூடத்திலேயிருந்து வீட்டுக்கு வரலே; எங்கோ காணாமப் போயிட்டான்னு தேடிக்கிட்டிருக்காங்களே..!"

"ஆமாம்; நான் பயலைத்தேடிப் பிடிச்சுக் கொண்டாந்துட்டேனே! இப்பதான் வீட்டிலே விட்டுட்டு வர்றேன்!..."

O

".''என்ன வக்கீலய்யா! வீடு ரே ஒட்டடை மயமா இருக்கே! சுத்தம் பண்ணக்கூடாதா?... இந்தக் குப்புசாமி எதுக்காக இருக்கேன்?...நாளைக்கு ஞாயிற்றுக்கிழமைதானே! நான் காலையிலே வர்றேன்; மத்தியானத்துக்குள்ளே சுத்தம் பண்ணி விட்டுடறேன்...என்ன?..."

O

"நோக்கு சேதி தெரியுமோ சாஸ்திரி? நம்ப பெரிய பண்ணை முத்துத் தேவர் இருக்காரோல்லியோ......அவர் கொழந்தை மீனு இருக்காளோல்லியோ...அவள் நேத்துக் கிணத்திலே தவறி விழுந்துட்டாள் தெரியுமோல்லியோ..."

"சரி; சரி! என்ன ஆச்சு? சீக்கிரம் சொல்லித் தொலையுங்காணும்! கொழந்தைப் பிழைச்சுட்டாளோ?..."

"நம்ப குப்பு இருக்கானோல்லியோ...அவன்தான் 'தடால்'னு கிணத்துலே குதிச்சு தூக்கிண்டு வந்துட்டானும்!..."

O

தூணிலும் இருப்பான்; துரும்பிலும் இருப்பான் ஆண்டவன் என்பார்களே—ஆனால் குப்புசாமி அந்த இரண்டிலும் தவிர மற்று எங்கும் இருப்பான்! இல்லாவிட்டாலும், அவனைப் பற்றிய பேச்சு எங்கும் ஒலித்துக் கொண்டே இருக்கும்!

அந்தக் கிராமத்திற்கு அவன் ஒரு 'பொது நலத் தொண்டன்'—'சமூக சேவகன்'—மிக மிக நல்லவன்!

பெரியவர்கள் இட்ட வேலையை 'பட்' டென்று செய்து முடிப்பான்; இடாத வேலைக்கும் படாத பாடுபடுவான்; தானே தலை கொடுத்தாவது செய்து விடுவான்!

குழந்தைகளுக்கோ அவன் அன்புத் தோழன்—விளையாட்டுத் துணைவன்!

மண் வீடு கட்டிக் கொடுக்க—மர பொம்மை வாங்கித் தர—மாங்காய் அடித்துத் தர—குப்புசாமி தேவைப்படுவான்!

பக்கத்து ஊரில் திருவிழாவா; பார்க்க வேண்டும் என்று குழந்தைகளுக்கு ஆசையா; குப்புசாமி அங்கேயும் இருப்பான்! ஒரு பட்டாளமே அவன் தலைமையின்கீழ் அணி வகுத்துச் செல்லும். பெற்றவர்கள் பயப்படவே மாட்டார்கள்; அத்தனை நம்பிக்கை அந்த அனாதையின் மேல்!

அது மட்டுமல்ல; குழந்தைகளுக்கும் அவன் எப்போதும் தேவைப்படுவான். ஏன் தெரியுமா? அவன் முதுகிலே ஏறி 'ஜம்'மென்று உட்கார்ந்து கொள்ள — அவன், "உப்பு மூட்டை வாங்கலியோ; உப்பு மூட்டை!" என்று வியாபாரக் குரல் கொடுப்பானே; அப்போது சவாரிசெய்யும் சிசுவுக்கு பூரிப்பு கொள்ளாது; சிரிப்பு நில்லாது! "உப்பு மூட்டை குப்பு" என்ற புதுப் பெயரே அவனுக்குச் சூட்டிவிட்டார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

பெரிய பண்ணை முத்துத்தேவரின் மகள் மீனுவுக்கு குப்புசாமியின் முதுகில் 'உப்பு மூட்டை' யாக பவனி போவதில் கொள்ளை மகிழ்ச்சி! "ஏ, குப்பு குப்பு! உனக்கு மிட்டாய் தாறேன்!......என்னைக் கொஞ்சம் உப்பு மூட்டை தூக்கேன்!..." என்று அது கெஞ்சிக் கொண்டே அவன் பின்னாலேயே திரியும்போது பரிதாபமாகக் கூட இருக்கும்!

அதுவும் அவன் மீனுவைக் கிணற்றிலிருந்து மீட்ட பிறகு பண்ணையார் பங்களாவில் அவனுக்கிருந்த தடை நீங்கி விட்டது. நேற்றுவரை அவனை ஊர் சுற்றி; உதவாக்கரைத் தடியன்—என்றார் பண்ணையார். இன்றோ "வாடா, பொடியா!" என்று அதிகாரத்தோடு கொஞ்சம் அன்பும் கலந்து அழைத்தார்.

ஆனால் அந்தப் பங்களாப் பிரவேசம் தனக்குப் புதிய பட்டம் ஒன்றையும் கட்டிவிடும் என்று அப்போது அவன் உணரவில்லை!

O

ஒரு நாள்...பொழுது விடிந்தது!

வேகமாகச் சென்று கொண்டிருந்தான் குப்புசாமி!

"ஏ, குப்பு! கொல்லையிலேயிருந்து தென்னம் மட்டைகள் வெட்டிப் போட்டிருக்கேன்; அதைக் கீற்று முடையணுமே!" –வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த நாட்டு வைத்தியர் பட்டுச்சாமி இப்படிச் சொன்னார்!

"இப்போ நான் பண்ணையார் வீட்டுக்கு அவசரமா போயிட்டிருக்கேன்; மீனுவைக் கொண்டு போய் 'ஸ்கூல்'ல விட்டுட்டு வந்து முடைஞ்சுடறேன்!"

—இப்படி போகிற போக்கிலே பதில் சொல்லி விட்டு வேகமாகப் பண்ணையாரின் பங்களாவை அடைந்த குப்புசாமிக்கு அங்கே ஒரு பேரிடி காத்து நின்றது!

"வாடா கழுதை! உன்னைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்!" என்று கர்ண கடூரமான குரலில் வரவேற்றார் பண்ணையார். அவர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது; கோபம் கோரத் தாண்டவம் புரிந்தது!

குப்புசாமிக்கு எதுவும் புரியவில்லை! இப்படிப்பட்ட வரவேற்பை அவன் இன்றுவரை எங்கும் பெற்றதே இல்லையே!

"ஏண்டா, ஊமையாகி விட்டாய் ஊர்சுற்றி நாயே? முதுகுத் தோலை உரிக்கட்டுமா? அல்லது முழு உண்மையையும் கக்குகிறாயா?"—பண்ணையாரின் இரும்புக் கரங்கள் குப்புவை நோக்கி நெருங்கி வந்தன!

"எஜமான்!...நீங்க... என்ன சொல்றீங்க...?"—தட்டுத் தடுமாறி எப்படியோ இதைக் கேட்டு விட்டான் குப்பு!

"எதுவும் சொல்லவில்லை! கேட்கிறேன்; எங்கேடா வெள்ளிக் கொலுசு என்று கேட்கிறேன்! திருட்டுக் கழுதை!...... எத்தனை நாட்களாக குறி வைத்திருந்தாய்? உப்பு மூட்டைத் தூக்கியதெல்லாம் இந்தத் தப்புக்குத் திரை போடத்தானா?"

ஆயிரம் தேள்கள் ஒரே சமயத்தில் கொட்டி விட்டதைப்போல அதிர்ச்சி அடைந்தான் குப்புசாமி! அவன் தலை சுழன்றது; கண்கள் மின்னலால் தாக்குண்டவை போல் இருண்டன; அவன் உடல் அவனையும் மீறி நடுங்க ஆரம்பித்து விட்டது! இருக்காதா? என்ன அபாண்டமான குற்றச்சாட்டு அது? தன் உடலையே ஊராருக்கென்று அர்ப்பணித்தவன்; உழைக்கவே பிறந்தவன் — அவன் தாங்கிக் கொள்ளக்கூடிய பழியா அது?

நேற்றுவரை அவன் கட்டிக் காத்துவந்த தூய குணம் புயல் காற்றிலே பஞ்சாயிற்றே! நல்லவன் என்று நல்லோரால் சூட்டப்பட்ட பெருமைக்குரிய பெயர் தூக்கி எறியப்பட்டு விட்டதே, கண நேரத்தில்!

குப்புசாமியின் உடல் வியர்த்துக் கொட்டியது! "என்னை நம்புங்கள் எஜமான்!"—உடலிலே இருந்த வலுவெல்லாவற்றையும் ஒன்று திரட்டி இப்படிக் கூச்சலிட்டான் குப்புசாமி!

பணம் படைத்தவர்களிடம் இரக்கம் இருப்பது அபூர்வமாயிற்றே! அதுவும் பண்ணைக்குச் சொந்தக்காரர்கள் என்றால் கேட்டளே; காட்டு தர்பார்—இவைகளைத்தானே எதிர்பார்க்க முடியும்?

குப்புசாமி கத்தித்தான் என்ன பலன்? காலைப் பிடித்துக் கெஞ்சித்தான் என்ன பலன்? காணாமல் போன மீனுவின் வெள்ளிக் கொலுசு எங்கேயிருந்தாவது எதிரே வந்து, "ஐயோ, நிரபராதி!" என்று வாய் திறந்து சொன்னால்தானே பண்ணையார் நம்புவார்! அவன் மேல் சுமத்தப்பட்டுவிட்ட புதிய பட்டம்—'திருடன்' என்ற தீய பட்டமும் மறைந்தோடும்!

விரைந்தோடும் குதிரைக்குச் சவுக்கடி தருவார்கள்: அது போல் கல்லும் கரைந்தோடும் வண்ணம் கதறிய குப்புவின் மேல் பண்ணையாரின் மிருக பலம் பாய்ந்தது!

அடி—உதை—குத்து—அபாய நிலைமை—எல்லையிலே அநியாயச் சாவு — இவைகளுக்கெல்லாம் கூட அந்த அனாதைத் தம்பி கலங்கிடவில்லை! தன் உயிர் பறிக்கப்படுவதென்றாலும்கூட அவன் துணிவான்; மானம் பறிக்கப்படுவது கண்டு கொதித்தான்—குமுறி எழுந்தான்— "கேட்பீர் இந்தக் கதையை!" எனக் குரலெழுப்பினான்!

கேட்டனர் அவன் சொன்ன சோகச் சித்திரத்தை! பாகு மொழியோடு கலந்து வந்த பண்ணையாரின் குற்றச் சாட்டுக்கும் செவிமடுத்தனர்!

முடிவில்...?

"பாவம்,...வறுமை!......தெரியாது செய்து விட்டான்!" என்று உண்மைக்குக் குழி தோண்டினர் சிலர்!

"பேசாமல் ஒத்துக் கொண்டு சாகாமல் பிழைத்துப்போடா!" -கூசாமல் இப்படிச் சமாதானம் சொன்னவர் சிலர்!

"நடித்தான்! நமக்கே உழைப்பதுபோல் துடித்தான்! அடப்பாவி..." என்று அங்கலாய்த்

[தொடர்ச்சி பக்கம்—10]

ச. கண்ணன்; அயன்புரம்

(?) ஒரிஸ்ஸாவில் மதுவிலக்கை ஒழித்துக் கட்டுகிறார்களாமே?

ஆமாம்; அமிர்த கௌரிக்கு ஏதாவது ஒரு பதவித் துண்டை வீசி எறிந்தால் இந்தப் 'புது ஆபத்து' வந்திருக்காது!

சி. முனிரத்தினம்; சிங்கபெருமாள் கோவில்

(?) கட்ட பொம்மனுக்குச் சிலை வைக்க வேண்டுமென்பதை 'ஏன் பெரியாரும் ஆதரிக்கிறார்?

இப்போது சிலை வைத்தால் தானே பிறகு அதை உடைக்கலாம்; அதனால்தான்!

எஸ். கே. முகம்மது காசிம்; நிலக்கோட்டை

(?) ஜில்லா போர்டை ஏன் ஒழிக்கிறார்கள்?

காங்கிரசுக்கு ஆதரவு இல்லையெனில் எல்லாமே ஒழிக்கப்பட வேண்டியதுதானே?

பி. வீரபாண்டியன்; நாரசிங்கன்பேட்டை

(?) காமராசர் எப்படியிருக்கிறார்?

படாஸ்கர் தீர்ப்பைக் குறித்து எங்கேயோ இருக்கிற அனந்தசயனம் அய்யங்காருக்கு ஏற்பட்டிருக்கிற உணர்ச்சியில் அணுவில் ஒரு பங்குகூட இந்தப் பச்சைத் தமிழருக்கு ஏற்படவில்லையே!

எஸ். கருணானந்தம்; திண்டிவனம்

(?) டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அமெரிக்காவில் இப்போது என்ன செய்கிறார்?

தேர்தல் நேரத்தில் இங்கு தி. மு. கழகத்தைப்பற்றிக் கதை கட்டி விட்டதைப் போலவே இப்போது அமெரிக்காவிலும் கம்யூனிசத்தைப்பற்றி கற்பனைப் டஜனுக்கு மூட்டைகளை அவிழ்த்துவிட்டுக் கொண்டிருக்கிறார!

'இன்பன்'; விருதுநகர்

(?) காமராசர் உண்மையிலேயே ஒரு பச்சைத் தமிழரா?

இல்லை; 'செயற்கைச் சந்திரன்' என்பதைப் போல அவரும் ஒரு 'செயற்கைப் பச்சைத் தமிழர்'! அதுவும் இப்போது வேகம் குறைந்து வருகிறது, நண்பரே!

சென்னை மாவட்ட தி. மு. க. தோழர்களுக்கு:

"பொதுச் செயலாளர் அவர்களின் அறிக்கைக்கேற்ப 13—10—57 அன்று, கிளைக் கழகங்கள், மன்றங்கள், படிப்பகங்கள் அனைத்தும் 'இந்தி எதிர்ப்பு நாளை'க் கொண்டாடக் கேட்டுக் கொள்கிறேன்.

"சென்னை மாவட்ட தி. மு. கழகத்தின் சார்பில் 13—10—57 மாலை திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

"அன்று பிற்பகல் 3 மணிக்கு மூலக்கொத்தளத்திலுள்ள — தாய் மொழிக்காக தம் இன்னுயிர் நீத்த இலட்சியக் காளைகள் தாளமுத்து—நடராசன் கல்லறைக்கு வீரவணக்கம் செலுத்திவிட்டு, அங்கிருந்து மாபெரும் ஊர்வலம் துவங்கி திருவல்லிக்கேணி கடற்கரையைச் சென்றடைவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

"கிளைக் கழகங்கள், துணை அமைப்புகள் ஆகியவற்றின் தோழர்கள் அனைவரும் கழகக் கொடிகள், இந்தி எதிர்ப்புத் தட்டிகள் ஏந்தி ஊர்வலத்தில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்."

—கோ. செங்குட்டுவன்
துணைச் செயலாளர்
சென்னை மாவட்ட தி. மு. க.

திரும்பிப் பார்...

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

டழியும். சுருங்கச் சொல்லின் தமிழ் தன் உயிர் இழந்து இந்தி மயமாக மாறும்.

"இனி, இலக்கியமற்ற புதிய இந்தியால் தண்டமிழ் வளரும் என்பர் சிலர். வறுமையால் செல்வம் வளருமாயின் தமிழ் இந்தியால் தழைத்தல் கூடும். இந்திச் சுமை நலம் எதுவும் தராது; எல்லா ஏதமும் விளைக்கும். தன்னுடு எவ்வித இயையும் தொடர்புமற்ற பிற மொழியைக் கட்டாயமாக்கிச் சுமத்தினால், அச்சுமை தாங்கும் சமுதாயம் தன் நிலை குன்றிப் பிறிது நலமும் ஏற்க முடியாமல் நோவுற்று அழிவது உறுதி."

—சோமசுந்தர பாரதியார்

[1938—ல் காரைக்குடியில் நடைபெற்ற தமிழர் மகாநாட்டில்]

○

"ஆங்கிலத்தின் இடத்தை இந்தி பெற்றால் தென்னாட்டவராகிய நமக்குத்தான் மிகுந்த கேடு உண்டாகும். தாய் மொழியே மக்களின் உயிர் நிலை. வேற்று மொழி ஒன்றைப் படிக்கவும், அது வழியாக நம் கருத்துக்களைத் தெரிவிக்கவும் நாம் கட்டாயப் படுத்தப்பட்டால், நமது உண்மையான முன்னேற்றத்திற்குத் தடை ஏற்படுவதுடன் நமது மன நிலையும் வளர்ச்சி அடையாது தேய்ந்துவிடும். ஆகவே, இந்தி மொழியைப் பொது மொழி ஆக்குவது பற்றி மிகமிக விழிப்பாக இருக்க வேண்டுமென்று நமது அரசியல் வாதிகளை எச்சரிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது!"

—ஆந்திர ரத்ன கோபால கிருஷ்ணமய்யா

[1923-ல் கயாவில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில்]

செயற்கைச் சந்திரன்



(சில விநோதங்கள்)

காதலன்:

அன்பே! அதோ அந்த செயற்கைச் சந்திரன் சாட்சியாக நான் உன்னை என்றும் மறவேன்.

காதலி:

அப்படியானால் செவ்வாய்க் கிரகத்தில் குடியேறும் வரையில் நமது காதலை ஒத்திவைப்போம் கண்ணாளா!

○

குழந்தை பாடுகிறது:

நிலவே! நிலவே! ஓடிவா! நில்லாமலே ஓடிவா!
சிகப்பு நிலவே ஓடிவா! செயற்கை நிலவே ஓடிவா!
"கப் சிப்" என்றே அமெரிக்கா—
கைகட்டிப் பார்த்திருக்க,
"பிப்! பிப்!" என்றே ஒலி யெழுப்பி
நிலவே! நிலவே!! ஓடிவா!!......

○

கவிஞன் வர்ணிக்கிறான்:

ஒளியாலே புகழ் பெற்றான் இயற்கைச் சந்திரன்! ஒலியாலே உலகப் புகழ்பெற்று விட்டாய் நீ! ஆமிரம் சந்திரனை அடுக்கினாலும் அவள் அழகுக்கு ஈடில்லை என்று கற்பனை செய்தோம்! இப்போதோ அமெரிக்கரும் ருஷ்யரும் சேர்ந்து ஆயிரத்துக்கு மேற்பட்ட சந்திரனை அடுக்கிக் காட்டிடுவார் போலும்!...புதிய சந்திரனே! பழைய சந்திரனை வர்ணித்து வர்ணித்து புளித்துவிட்ட கற்பனைகள் உன் வரவால் புதுமை பெறட்டும்—நீ வாழ்க; இன்னும் சில மணி நேரம்!...

○

கள்ளன்:

(தோழனிடம்) இதென்னடா புதிய தொல்லை! இனிமேல் நம் தொழிலுக்கு அமாவாசை துணை புரியாது போலிருக்கே!...ஒரு சந்திரன் போனால் ஒரு சந்திரன் வரும்போல இருக்கே!...

○

பஞ்சாங்கக்காரன்:

செயற்கைச் சந்திரனுக்குக் கிரகணம் பிடித்தால் நம்மவா பிழைப்பு விருத்தியாக மார்க்கமுண்டு!

விற்பனையாகின்றன!

இந்தி ஏன் வேண்டாம்?
இந்தியால் தமிழ் எப்படிக் கெடும்?
அந்த மந்தி—காசா—முகவதியால் தமிழர் கலை எவ்விதம் குறைவுபடும்

—இத்தனைக்கும் ஏற்ற எழில்மிகு விளக்கங்கள்!

அறிஞர் அண்ணாவின்
அறப்போர்
விலை ரூ. 1—00

நாவலர் நெடுஞ்செழியன் தீட்டிய
மொழிப் போராட்டம்
விலை ரூ. 1—00

திராவிடப் பண்ணை
தெப்பக்குளம் :: திருச்சி—2

ஆசிரியரும் அச்சிடுபவரும் வெளியிடுபவரும் மு. கருணாநிதி: முரசொலி அச்சகம், 4—128, மவுண்ட்ரோடு, சென்னை